நயினாதீவு-கனேடியர் அபிவிருத்திச் சங்கம்

பெருமையுடன் வழங்கும்

Nainativu Canadian Development Society

*Proudly presents*

20வது

# தீபம் 2016



April 30th, 2016 Saturday 5:00PM

J Clarke Richardson Collegiate Institute Auditorium

1355 Harwood Avenue North, Ajax, ON L1T 4G8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்

**20 வது ஆண்டில் பெருமையுடன்**

**வழங்கும்**

# தீபம்

# 2016

***April* 30, 2016 சனிக்கிழமை மாலை 5:00 மணி**

**இடம் : J Clarke Richardson Collegiate Institute கல்லூரி மண்டபம்**

1355 Harwood Avenue North, Ajax, ON L1T 4G8

**Nainativu Canadian Development Society**

**2682 Eglinton Ave. E. P.O BOX 44535, Scarborough, ON. M1K 2S0**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nainativu Canadian Development Society

## Committee Members 2016

**President:**
A. Sathananthan

**Vice President:**
V. Manoharan
Dip. In. Edu

**Hon. Secretary:**
K. N. Jayasivathasan
B.Com Dip. In. Edu

**Asst. Secretary:**
S. Vimalananthan
Dip. In. Acc.

**Hon. Treasurer:**
K. Kulasingham
B.Eng., B.Sc

**Editor:**
S. Umaimaran

**Accountants:**
M. Raveendran
B.Com

S. Kulamogan
B.Com

A. Vivekananthan
Dip. In. Acc.

**Committee Members:**
K. Subashanthirabose
S. Murugavel
N. Srimurugathasan
P. Nanthakumar
Dr. Saba Varatharajah
M. Sivanantharajah
T. Elankumaran
P. Sundaravel
K. Ramathas
K. Nithiyananthasivam
S. Mohanarajan
R. Thiruvathanan
R. Vijayakumar
T. Sivayogalingam
M. Sivanesan
N. Sutharsan
M. Sasivaanan
K. Sureshkaran
M. Vivekananthan
M. Parameshwaran
M. Niparanjan
V. Kuganathan
S. Thirumaran
T. Parameswaran

**ஊர் கூடிக் குதூகலிக்க கோடைகால**
**ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்**

**நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தின்**

**இருபதாவது ஆண்டு**

**வருடாந்த கோடைகால ஒன்றுகூடல் - ஆடி மாதம் 31ம் திகதி**

கனடா வாழ் நயினை மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| காலம் | இடம் |
|---|---|
| **எதிர்வரும் 2016 ஆடி மாதம் 31ம் திகதி** | **Morningside Park Area 8 & 9** |
| **ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி** | **(Morningside & Ellesmere)** |

**தொடர்புகளுக்கு:**

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் | பத்திராதிபர் |
|---|---|---|---|
| **அ. சதானந்தன்** | **க.ந.ஜெயசிவதாசன்** | **க.குலசிங்கம்** | **ச.உமைமாறன்** |
| **416 835 6418** | **416 825 8083** | **416-317-9413** | **647-218-8624** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடிய தேசிய கீதம்

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள் உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய் வலுவாய், இயல்பாய்
நீ எழல் கண்டுவப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்
எம் நிலப் புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி அணிவகுத்தோம்!

மொழிபெயர்ப்பு: வி. கந்தவனம்

## தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானம் அளந்ததனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்ததனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

ஆக்கம்: சுப்பிரமணிய பாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க கீதம்

எடுப்பு

நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்
நன்றாற்றி என்றும் வாழ்க!

தொடுப்பு

மனமொழி மெய்களால் நாக பூஷணி
மலர்ப்பதம் நித்தமும் பணிவோம்! (நயினாதீவு...)

முடிப்பு

சர்வ மதங்களின் சந்நிதி மேகலை
சார்மணி பல்லவம் ஓங்க!
பல்லினச் சமூகப் பண்புடன் இணைந்து
நல்வளம் பெருக்கி பகிர்வோம் (நயினாதீவு...)

சூழ்அலைக் கரங்கள் துதித்திட, வேப்பம்
தூநிழல் தென்றலும் ஆற்றும்
ஆழ்கடல் முத்தம் அணிசெய, ஆன்ற
அருந்தமிழ் புலமை ஆளும் (நயினாதீவு...)

அன்னம் பாலித்து அமுத சுரபியும்
அற்றார் பசிப்பிணி தீர்க்கும்
இன்னும் மழலைச் செல்வமும் தருவாள்
பென்னம் பெரிய பிராட்டி (நயினாதீவு...)

நேயமாய் எங்கள் ஊர்நலம் சிறக்க
வாய்மையும் தூய்மையும் வளர்ப்போம்
தாயகம் மறவாத் தனித்துவத் தோடு
தமிழர் நாங்கள் வாழ்வோம். (நயினாதீவு...)

முற்றும்

ஆக்கம்: நயினை கவிஞர் நாக சண்முகநாதபிள்ளை *BSc.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மிகு

# கனடிய நயினாதீவு நாகம்மாள் கோவில்

## Nainativu Nagammal Kovil of Canada

**Tel: 416-293-4000 Fax: 416-293-9536**

**www.nainainagammal.ca**



***கோவில் திறந்திருக்கும் நேரம்***

*நாள்தோறும் காலை 8:00 மணிமுதல் பகல் 1:00 மணிவரை*
*மாலை 5:00 மணிமுதல் இரவு 9:00 மணிவரை*

## நயினாதீவு நாகம்மாள் கலாசார நிலையம்

**(Nainativu Nagammal Cultural Centre)**

திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், கலை கலாசார நிகழ்வுகள், நூல் வெளியீடுகள், ஊர்மக்களின் ஒன்றுகூடல்கள், அரங்கேற்றங்கள் மற்றும் தமிழர் அடையாள நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு கோவிலுடன் தொடர்பு கொள்ளவும்.

**1537-1539 Warden Ave, Scarborough, ON M1R 4Z8**

**(Warden & Ellesmere) Enter via continental place**

**கனேடிய நயினாதீவு நாகம்பாளுக்கு நிரந்தரக் கட்டிடத் திருப்பணிக்காக**

அரவிந்தனின் மெகா ரியூனஸ் இசைக்குழுவின் இசை மழையில்

No:



'சுப்பர் சிங்கர்' புகழ் சாய் விக்னேஷ்

கனேடிய முன்னணிப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்



# இசை அருவி

இடம்: கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயக் கலாச்சார மண்டபம்

**635 Middlefield Road, Scarborough, ON. M1V 5B8 (Middlefield & Finch)**


தொடர்புகளுக்கு: - கனேடிய நயினாதீவு நாகம்பாள் கோவில் - 416.293.4000

MAY
07
6:00 PM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் சிந்தனை துளிகள்

**என் அன்புக்குரிய இனிய உறவுகளே நண்பர்களே கலா ரசிகப் பெருமக்களே.**



இன்று 20 வது ஆண்டு தீபம் கலை மாலைப் பொழுதினிலே உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது சங்கமானது இருபது ஆண்டுகளாக தீபம் விழாவை சிறப்பாக நடாத்தி வருகின்றது. இந்த விழாவின் மூலமும் எமது ஊர் மக்கள் மற்றும் விளம்பரதாரர்கள் ஆகியோரின் பங்களிப்புகளின் மூலமும் எமது ஊருக்கும் தாயகத்திலே அல்லலுறும் மக்களுக்கும் எம்மாலான பங்களிப்பை எமது சங்கம் செய்து வருவது யாவரும் அறிந்த ஒன்றே.

இந்த கனடா நாட்டில் எத்தனையோ சங்கங்கள் உருவாகி மறைந்த போதும் ஒரு சில சங்கங்கள் மட்டும் தான் தொடர்ந்து இயங்கி வருகின்றது. அந்த வகையில் எமது கனேடியர் அபிவிருத்திச் சங்கம் தொடர்ந்தும் தனது சேவையை கைவிடாது 20வது ஆண்டில் கால் பதித்து நிற்பதை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றது அதற்கு எமது ஊர் உறவுகளும் வர்த்தகப் பெருமக்களும் மற்றும் விளம்பரதாரர்களும் தரும் ஆதரவு தான் எமது சங்கம் நிலைத்து நிற்பதற்கு உறுதுணையாக இருக்கின்றன.

எமது ஊர் மக்களே மீண்டும் நான் உங்களிடம் வேண்டுவது எமது வருங்கால சந்ததியினர் நமது சொந்த மண்ணை மறக்காமல் இருப்பதற்கு அனைவரும் நமது இளம் சந்ததியினரை எமது சங்கத்திலே இணைத்து நமது கலைகாலச்சாரம் பண்பாடுகளைப் பேணிப் பாதுகாக்க முன்வர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

எமது சங்கமானது தற்போது சில வேலைத்திட்டங்களைச் செய்யத் தீர்மானித்துள்ளது. எமது ஊரிலே நன்னீர் கிடைப்பதற்கு வழிவகுத்தல் இம்முறை இங்கு (கனடா) Sick kids வைத்தியசாலைக்கு எம்மாலான பங்களிப்பை செய்தல் போன்ற திட்டங்களை முன்னெடுத்து உள்ளது.

எனவே எம் உறவுகளே நீங்கள் அனைவரும் எம்மோடு இணைந்து செயற்பட முன்வரவேண்டுமென உங்கள் அனைவரையும் அன்போடு வேண்டுவதுடன் இதுவரை காலமும் எம்முடன் இணைந்து செயற்பட்ட சங்க உறுப்பினர்கள், எமது உறவுகள் வர்த்தகப் பெருமக்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் இன்றைய தீபம் விழா சிறப்புற அமைய எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்மனை வேண்டி விடைபெறுகின்றேன் நன்றி வணக்கம்.

தலைவர்

**அ. சதானந்தன்**
நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கம்
கனடா.


ARANAN AUTO
Maintenance



* All Mechanical Services
* Engine Work
* Brake Work
* Free Estimate & Engine Diagnostic

PARA Certified Technician
B: 416.755.4787
C: 416.357.5592

85 Nantucket Blvd, Unit # 06,
Scarborough, ON M1P 2N7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் சிந்தனையில் இருந்து உங்களுக்கு...



அன்பார்ந்த கனடா வாழ் நயினை அன்பு நெஞ்சங்களே கலைஞர்களே, கலாரசிகர்களே.

நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கத்தின் தீபமகளுக்கு இன்று அகவை இருபாதாகின்றது. 1996 ம் ஆண்டு ந.க.அ. சங்கத்தில் உருவாகி 1997ம் ஆண்டு சிந்திரை நிலவில் பிரசவம் பெற்று 1998ம் ஆண்டு கனடிய சட்டவிதிகளுக்கு அமைவாக பதிவு பெற்று குழந்தைப்பருவம், பிள்ளைபருவம், கன்னிப்பருவமென கற்றோர் முன்னும் மற்றோர் முன்னும் கழிநடம் பயின்ற பாவை 20 வயதை எட்டி நிற்கும் இவ்வேளையில் அடுத்த தலை முறையின் கையில் ஒப்படைக்க வேண்டிய பெறுப்பு பெற்றோர்களுக்கு ஏற்பட்டுவிட்டது 50 வயதை தாண்டிய பெற்றோர்கள் தீப மகளை வளர்ப்பதற்கு பல பிரயத்தனங்களை செய்த போதிலும் அவளுக்கு என்று நிரந்தர இல்லம் இல்லாமை அவளின் வாழ்வை கேள்விக்குறியாக்கி நின்கின்றது. இந்தக் கேள்விக்குரிய விடையை கனேடிய அபிவிருத்திச் சங்க பெற்றோர்களிடம் விடுகின்றேன்.

கடந்த 20 ஆண்டுகள் பின்னோக்கி பார்க்கின்ற பொழுது அன்றய இளைஞர்கள் இன்றைய முதியவர்களாக மாறிவிட்டனர் இம்மண்ணில் தீபம், விழா மூலம் கிடைத்த நிதியை நயினையில் உள்ள பாடசாலைகள், பொது நிறுவனங்கள், பாலர் பாடசாலைகள், சல்லிபரவை மயானம், ஆலங்குள வீதி புனரமைப்பு, விஷேட உதவி தேவைப்பட்ட பிள்ளைகள், மணிபல்லவ கலாமன்றத்தில் ஒப்பனையறை மருத்துவாத் தேவைப்பட்டோர், வாழ்வாதரம் வேண்டி நின்றோர், இன்னோரன்ன தேவைகளுக்காக தளத்திலும் களத்திலும் புலத்திலும் புலம்பெயர்ந்து வந்தபோது வாழ்வு தந்த கனேடி மண்ணிலும் மருத்துவ நிதி குழந்தை வைத்திய நிதி ஆகியவற்றிக்கும் கலைவளர்ச்சிக்கும் கோடை கால ஒன்று கூடல் விளையாட்டு போட்டி ஆகியவற்றிக்கும் எம்மக்களின் நிதி பகிரப்பட்டுள்ளது.

சங்கம் ஆரம்பிக்கப்பட்ட 1996/97 காலப்பகுதியில் தீபம் நிகழ்வை இளைஞர்குழு எவ்வறு பொறுப்பேற்று செய்தார்களோ அவ்வாறே இம்முறையும் 20வது ஆண்டில் அவ்இளைஞர்களில் சிலரும் இன்றைய இளைஞர்களும் இணைந்து வெகு விமரிசையாக ஒழுங்கு செய்திருக்கின்றார்கள் அத்துடன் பல்கலை கழகங்களில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களை உள்வாங்கி அவர்களே தீபம் ஒழுங்குகளை மேற்கொள்வது சிறப்பம்சமாகும் இன்னும் பல் ஆண்டுகள் கனேடிய மண்ணில் தமிழும் கலையும் வாழும் என்பதில் ஐயமில்லை.

இம்முறை பிரதமவிருந்தினராக வருகைதந்திருப்பவர் Dr. மாரிமுத்துவேதநாதன் MA, PHD., அவர்கள் யாழ்பாண பல்கலைகழகத்தில் இந்து நாகரீக துறையின் பீடாதிபதியாக இருப்பது நயினை மண்ணுக்கு பெருமை சேர்ப்பதாகும் அத்துடன் நாயினாதீவு ஸ்ரீகணேசாகனிஷ்ட மகாவித்தியாலத்தில் அதிபராக கடமையாற்றி இன்று யாழ்பாணத்தில் பூம்புகார் மகாவித்தியாலய அதிபராக விளங்கும் திரு. கணபதிப்பிள்ளை கனேஸ்வரன் BA அவர்கள் இலங்கையில் இருந்து எமது கௌரவ விருந்தினராக வருகைதந்துள்ளார். இருவரும் கலைத்துறையோடும் சமயத்துறையோடும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சிறப்பு விருந்தினராக இருவரை அழைத்திருக்கின்றோம் Dr. ஆதிகணபதி சோமசுந்தரம் பல்வைத்திய நிபுணராக கனடாவில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றி வருவதுடன் சமய சமூக தேவைகளுக்கு தம்மாலான உதவியை செய்து வருவதுடன் இருபது (20) ஆண்டுகளாக தீபம் கலைவிழாவிற்கு வருகை தருவதுடன் தமது பங்களிப்பையும் நல்கி வருபவர்.

நயினதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம் 1996ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போது அதன் போசகராக இருந்து இன்றுவரை சங்க வளர்சிக்கும் கல்வி மேம்பாட்டிற்கும் தம் பங்களிப்பை செய்து வரும் சட்டத்தரணி பொன். கைலாசநாதன் அவர்களின் புதல்வர் Dr. சுகந்தன் கைலாசநாதன் இளம் தலைமுறையில் இருந்து சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கின்றார். இன் நால் வரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

ந.க.அ.சங்கம் தீபம் இளைஞர் குழுவினால் இம்முறை ஊர் கலைஞர்களின் இரண்டு நிகழ்வு இடம் பெறுகின்றது. இசை நிகழ்வும் பல்வேறுபட்ட ஆசிரியர்களிடம் பயிலும் கலை மாணவிகளை ஒன்றிணைத்து படிப்பு முடித்து பட்டம் பெற்ற மாணவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் ஒழுங்கு செய்துள்ளார்கள் அவர்களின் வருகை சங்க வளர்ச்சிக்கு ஒரு படிக்கல்லாக அமைகின்றது.

கனடிய பல்கலைக் கழகங்களில் மருத்துவத்துறை, அரசியற்துறை ஆகியவற்றில் சிறப்பு கற்கை மேற்கொள்ளும் மாணவர்களை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் கனேடிய அபிவிருத்திச் சங்கம் 20வது ஆண்டில் கௌரவிக்கின்றமை அம் மாணவர்களின் பெற்றோர்களின் வழி நடத்தலுக்கும் கடின உழைப்பிற்கும் கிடைக்கும் வெகுமதியாகும்.

20வது ஆண்டுகளாக எமக்கு நடன நிகழ்வைத் தந்து கொண்டிருக்கின்ற சாந்தநாயகி நாட்டியக்கோவில், சதங்கைநர்த்தனாலயம், சிலம்பொலி நாட்டியக் கல்லூரி, அபிராமி நாட்டியாலாயம் இருதய Danee Company, S.S.L Enterprice, ஸாமகானம் இசைக் கல்லூரி, அவ்வப்போது தாம் கற்றகலையை எமக்களித்த ஆசிரியர்கள் கலைஞர்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் நினைவு கூருகின்றோம் நாடகத்துறையை பொறுத்தவரையில் எமது மக்களின் இயல்பான பேச்சு நகைச்சுவையோடு தான் ஆரம்பமாகும் இதனை நெறிப்படுத்தித்தரும் எம் மண்ணின் மைந்தன் "ஒற்றைபனை புகழ் ஆதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளங்குமரன் இன்று "தூங்காதூர்" வரை தொடர்சியாக பல நாடகங்களை நெறிப்படுத்தித் தந்திருக்கின்றார். அவ்வப்போது நகைசுவை நாடகத்தை அமல்குமார் சின்னத்தம்பியும் எமக்களித்திருக்கின்றார்.

இம்முறை பல்கலைக் கழகங்களில் கல்வி தொடரும் மாணவர்கள் 20வது ஆண்டு தீபம் கலைமாலைப் பொழுதை முன்நின்று நடாத்துவது எமக்கு பெருமை தருகின்றதுடன் அடுத்த தலைமுறை ந.க.அ.ச வழி நடாத்தும் என்பதில் ஐயமில்லை. அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்கள் இளைஞர்கள் வர்த்தகர் எம்மக்கள் கலாரசிகர்கள் அனைவரையும் எல்லாவற்றிற்கும் எமக்குமேலாக நின்று அருள் புரியும் நயினை நாகபூஷணி அம்பாளை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றேன்.

இங்ஙனம்
**கௌரவ செயலாளர்**
**நடா. ஜெயசிவதாசன் BA, Dip in ed**

## பொருளாளர் உள்ளத்திலிருந்து சில வார்த்தைகள்



நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம் 1996ம் ஆண்டு கனடாவில் ஒரு குழந்தையாகப் பிரசவித்து 1997ம் ஆண்டு தனது முதலாவது தீபம் கலைமாலைப் பொழுதில் காலடி எடுத்து வைத்து பல படிகளையும் தாண்டி உங்கள் முன் இன்று இருபதாவது தீபம் கலைமாலைப் பொழுதுவரை உயர்ந்து நிற்பதையிட்டு அகம் மகிழ்ந்து முகம் மலர உங்கள் அனைவரையும் இன்றைய நாளில் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நாம் எமது தாய் நாட்டிலிருந்து கனடாவிற்கு புலம்பெயர்ந்து மூன்று தசாப்த்தங்களை கடந்து விட்டாலும் எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதில் பல்வேறுபட்ட அமைப்புக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன. அந்த வரிசையில் எமது சங்கம் கடந்த பல ஆண்டுகளாக பிறந்த மண்ணுக்கும் தாய்நாட்டிற்கும் பல அரிய சேவைகள் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

எமது சங்கத்தின் அடுத்த கட்ட நகர்வாக கனடாவாழ் நயினாதீவு மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு வேண்டிய ஊக்குவிப்பைச் செய்வதும் நாம் வாழும் கனடாவுக்கு எம்மாலியன்ற உதவிகளை செய்வதுமாகும். கனடாவில் வாழும் நயினாதீவு மாணவர்களை கல்வித்துறையில் முன்னேற்ற வேண்டும் என பல ஆண்டுகளாக எமது சங்கத்தின் போசகர்களில் ஒருவரும் சட்டத்தரணியுமான மதிப்புக்குரிய திரு. பொன்னம்பலம் கைலாசநாதன் அவர்கள் எங்களுக்கு ஆலோசனை வழங்கிய வண்ணமே இருந்தார்கள். இருப்பினும் கடந்த ஓரிரு ஆண்டுகளாக ஏற்பட்ட தொடர்ச்சியான எமது உறவுகளின் இழப்புக்கள் காரணமாக அவருடைய ஆலோசனையுடன் கூடிய எமது விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை. எமது சங்கத்தின் 20வது ஆண்டு தீபம் விழாவில் சட்டத்தரணி கைலாசநாதன் அவர்களின் உந்துதலிலும் எமது சங்க உறுப்பினர்களின் அயராத உழைப்புடனும் எமது கனவு நனவாவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

கனடாவாழ் நயினாதீவு மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக "சிகரத்தைத் தொடு" என்ற தலைப்பில் கல்வியில் மிகப்பெரிய பெறுபேறுகளைப் பெற்ற பல்கலைக்கழகத்தில் வைத்திய கலாநிதித் துறையில் கல்விகற்கும் எம் மண்ணின் மாணவி செல்வி நிலானி சிவப்பிரகாசம் அவர்களை கௌரவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அத்துடன் கடந்த ஆண்டுகளில் பொதுச்சேவையிலும் கல்வித் துறையிலும் சிகரத்தை தொட்ட கனடா வாழ் நயினாதீவு இளையவர்களைக் கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றேன்.

எம்மை எல்லாம் வரவேற்று வாழவைத்துக் கொண்டிருக்கும் நாம் வாழும் நாடு கனடாவுக்கு எமது பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துக்கமைய 20வது "தீபம்" கலைமாலைப் பொழுதில் சேகரிக்கப்படும் பணத்தில் ஒரு பகுதியை ரொரன்ரோ சிறுவர் வைத்தியசாலைக்கு (Toronto SickKids Hospital) அன்பளிப்புச் செய்யவுள்ளோம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் பதிவு செய்வதில் பெருமிதம் அடைகின்றோம். அத்துடன் எமது ஊரிலுள்ள மூன்று பாடசாலைகளுக்கும் அவர்களுடைய தேவைகளை அறிந்து நிதி உதவி வழங்குவது எனவும் நயினாதீவிலுள்ள குளம் ஒன்றை தேர்ந்தெடுத்து நன்னீரைச் சேகரிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வது எனவும் தீர்மானித்துள்ளோம் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த வருடம் எமது மாணவர்களுக்கான கல்விப்பட்டறைக்கு போதிய மாணவர்கள் பதிவு செய்யாததால் அதை நடாத்த முடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவிப்பதுடன் 2016ம் ஆண்ட கோடைகாலத்தில் எமது மாணவர்களுக்கான கல்விப்பட்டறையை நடாத்த வேண்டும் என்பது விருப்பம். அடுத்துவரும் நிர்வாகசைப் கூட்டத்தில் அதற்கான கால நேரம் தீர்மாணிக்கப்பட்டு உங்களுக்கு அறியத்தருவோம் என்பதை தெரிவிப்பதுடன் பெற்றோரும் இதில் கூடிய கவனமெடுத்து இதில் பங்குபற்றி பலதுறை கல்விசார் நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்று எமது மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.


"எண்ணி அடைதல் வேண்டும் நல்லதே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல் அறிவு வேண்டும்"

ஒவ்வொருவரும் எமது சமூகம் வாழவேண்டும், எமது அனம் வாழவேண்டும் என்று நினைத்தால் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்ந்து இலகுவில் எமது இலட்சியத்தை வென்றுவிடலாம். எமது சங்கத்தின் 20வது ஆண்டு தீபம் கலைமாலைப் பொழுது சிறப்புற நடைபெற உதவிய ஆசிரியர்கள் மாணவர்கள் வர்த்தகப் பெருமக்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், சங்க உறுப்பினர்கள் மற்றும் அனைத்து ஊடகங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அனைவருக்கும் எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பாளின் அருள் கிடைக்க வேண்டி விடைபெறுகின்றேன். நன்றி.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

என்றும் நற்பணியில்
**க.க. குலசிங்கம்.**

## கணக்காய்வாளர் கண்ணோட்டத்தில் கடந்த 10 ஆண்டுகள்....



நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தின் இருபது ஆண்டுகள் நிறைவுற்று தீபம் 2016 கலை நிகழ்வை கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சங்கத்தின் கணக்காய்வாய்வாளராக கடந்த 10 ஆண்டுகளாக சங்கத்தின் செயற்பாடுகளிலும் சங்கத்தின் ஒவ்வோர் ஆண்டு கணக்குகளை மீளாய்வு செய்து, கணக்காய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்து சங்கத்தின் நிதிப்பரிமாற்றங்கள் உரிய முறையில் நம்பத்தகுந்த அடிப்படையில் அமைந்துள்ளதை உறுதிப்படுத்தும் பொறுப்பில் என்னை அமர்த்தியமைக்கு சங்க நிர்வாக உறுப்பினர்கட்கு நன்றியை தெரிவிப்பதுடன் ஒவ்வோர் ஆண்டும் பொருளாளராக கடமை ஏற்பவர்களின் அர்ப்பணிப்புடனான சேவையை இச் சந்தர்பத்தில் நினைவு கூருவதுடன் அவர்களின் சேவை தொடர வேண்டும் என அவா கொள்கின்றேன். சங்கத்தின் நிரந்தர வைப்பாக 18 ஆயிரம் டொலர்கள் வங்கியில் வைப்பிடப்பட்டுள்ளதை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புவதுடன் இதற்கு ஒத்துதவிய சங்க அங்கத்தவர்கள் நிர்வாகசபை உறுப்பினர்கள், விளம்பரதாரர்கள் யாவருக்கும் என்றென்றும் நன்றி உடையவர்களாக இருப்போம் என உறுதி கூறுகின்றோம்.

என்றென்றும் நன்றியுடன்
**முத்தையா ரவீந்திரன் B.Com**
**(கணக்காய்வாளர் ந.க.அ.ச)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபம் 2016 மலராசிரியரின் மனதிலிருந்து...



பல்துறைக் கலைஞர்களின் சங்கமமாய் முத்தமிழின் பரிணாமமாய் ஆண்டுதோறும் இடைவிடாது பிரகாசமாய் ஒளிரும் நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தின் தீபம் கலைமாலைப் பொழுதில், இருபதாவது தீபம் ஆண்டு மலரின் மூலம் அனைவரையும் சென்ற ஆண்டைப் போல் இம்முறையும் மலராசிரியனாக சந்திப்பதில் அளவில்லா பொறுப்புணர்ச்சியுடன் கூடிய சந்தோசம் அடைகின்றேன்.

கடந்த 20 ஆண்டுக் காலப்பகுதியில் எமது சங்கத்தின் வளர்ச்சியில் தோளோடு தோள் நின்று உழைத்த துடிப்புள்ள சங்க உறுப்பினர்கள், வர்த்தகப் பெருமக்கள், விருந்தினர்கள், கலைஞர்கள், அன்பளிப்பாளர்கள், நம் ஊரவர்கள், ஊடகவியலாளர்கள், மலர் அச்சமைப்பாளர்கள், நலன் விரும்பிகள் மற்றும் அனைவரையும் நன்றி உணர்வோடு பாராட்டுகின்றேன்.

தீபம் 2016 மலரானது வருந்தினர்களின் வாழ்த்துச் செய்தியோடும் நயினாதீவிலும் வேறு பல நாடுகளிலும் இயங்கிவரும் நயினாதீவோடு தொடர்புடைய அன்பர்களின் ஆசிச் செய்தியோடும் ஊரின் சமகால நிகழ்வுகளோடும் தீபம் கலைநிகழ்வுக்கு பேருதவி புரிகின்ற வர்த்தகப் பெருமக்களின் விளம்பரங்களோடும் Apex Creations Printing நிறுவனத்தின் அச்சமையிலும் வெளிவருகின்றது.

சங்கமானது தீபம் விழாக்களின் மூலம் பலதரப்பட்ட கலைஞர்களின் திறமைகளை ஆண்டு தோறும் வெளிக் கொணர்ந்துள்ளதோடு கோடை காலத்தில் விளையாட்டுப் போட்டியின் மூலம் விளையாட்டுத் துறையிலும் பெரும் பங்காற்றி வருகிறது. அத்தோடு பல உள்ளூர் வெளியூர் பெரியோர்களை கௌரவித்தும் உள்ளது மற்றும் ஊருக்கும் நாட்டுக்குமான தன்னலம் கருதாத பங்களிப்பினையும் செய்துள்ளது. தொடர்ச்சியாக எமது சங்கம் நயினாதீவில் முக்கிய அபிவிருத்தித் திட்டங்கள் இனம்காணப்பட்டு செயற்படுத்தவும் எண்ணியுள்ளது.

எமது நயினாதீவானது சமய சம்பந்தமான ஊர் மட்டுமல்ல, தமிழின் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பெரும்காப்பியங்களுடன் தொடர்புபட்டு நிற்கிறது என்பதையும் உலகறியச் செய்ய வேண்டிய கடப்பாடும் எம்மைச் சார்ந்துள்ளது.


நம் ஊரவர் ஒவ்வருவரிலும் வெவ்வேறு விதமான கலைத்திறமைகள் நிறையவே காணப்படுகின்றன. அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு மேடையேற்றப்பட வேண்டும் என்பதும், தமிழோடு பின்னிப் பிணைந்த மரபுக் கலைகளுக்கும் சரியான இடம் கொடுக்கப்படவேண்டும் என்பது எனது அவாவாகும்.

நம் ஊரவர்கள் யாவரும் சங்கத்தின் அங்கத்தவர்களாக இணைந்து சங்கத்தை வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்வதற்கும் பல செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் முன்வரவேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

தீபம் 2016 சிறப்புற வாழ்த்துகின்றேன்

அன்புடன்
உமைமாறன் சடையப்பசாமி
மலராசிரியர்
நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்


குழந்தைகளின் எதிர்கால கல்வி சேமிப்புத் திட்டம்

தெளிவான விளக்கம் நிறைவான சேவைக்கு அழையுங்கள்...



THARANY MOHENDRAN B.Sc
Sale Representative
Dir : 647-236-9577
Res: 905-534-0906
Bus : 905-707-6630
Email: tharany_mohendran@heritageresp.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கத்தின் இருபதாவது (20) ஆண்ட விழாவில் குழுமி இருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்பதிலும், உங்களுக்கு என் வாழ்த்துக்களை கூறுவதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 20 ஆண்டுகாலமாக இச் சங்கம் ஆற்றிவரும் பணிகள் எமது ஊருக்கும் இங்குவாழ் எம் ஊரவர்க்கும் மிகவும் மயனுள்ளதாக இருப்பதுடன் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது. இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கல்வி மேம்பாட்டு கௌரவிப்பும் ஊக்குவிப்பும் பெரும் சாதனை படைக்கும் என நம்புகின்றேன். எமது சொத்து, முதலீடு அனைத்தும் கல்வியே. எனவே எமது பெற்றோரும், குழந்தைச் செல்வங்களும் இதை உணர்ந்து எமக்கும் எமது ஊருக்கும் பெருமை சேர்க்கும் வகையில் கல்வியில் முன்றேன்றமடைய சகல வழிகளையும் பின்பற்ற வேண்டும் என தாழ்மையுடன் வேண்டுகின்றேன். கல்விக்குக் கொடுக்கப்படும் ஆதரவு சங்கத்தில் மேலும் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்.

நன்றி

**பொ. கைலாசநாதன்.**

---

## வாழ்த்துச் செய்தி

**மென்மேலும் சேவை ஓங்கட்டும்**



எமது மண்ணில் பிறந்த அன்பர்கள் தமது விழுதுகள் துணையாக நிற்க ஒரு பெரிய ஆலமரமாக "நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்" என்ற நாமத்துடன் கடந்த 20 ஆண்டுகளாக நின்று நிலைப்பது எமக்கு பெருமையும் மிக மகிழ்ச்சியும் தருவதாகும். காலம் காலமாக இதை நிருவகிக்கும் தொண்டர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

கலை, கல்வி என்பன நயினை மண்ணின் மூலதனம். இவை குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது நயினையில் பிறந்த குடிபுகுந்த ஒவ்வொரு ஆண், பெண்ணினதும் கடமையாகும். எங்கள் இனம் சந்ததியின் புகழ் புலம்பெயர்ந்த நாடுகள் எல்லாவற்றிலும் கொடிகட்டி பறக்கவேண்டும். இதுவெ எனது பேரவா.

எங்கள் பெருமையை, மண்ணின் புகழை காப்பாற்றவேண்டியது நமது எதிர்காலச் சந்ததியின் தலையாய கடமையாகும். அவர்களை நம்பி என் வாழ்த்துச் செய்தியினை நிறைவு செய்கின்றேன்.

சுபம்

தம்பையா ஸ்ரீபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப காலத் தலைவரின் ஆசிச் செய்தி - 1996



தீபம் 2016 நிகழ்வானது நயினாதீவு கனேடிய அபிவிருத்திச்சங்கம் தனது 20 ஆம் ஆண்டு நிறைவை கொண்டாடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

1996 ஆம் ஆண்டு ஒரு சிறிய அறையில் ஒரு சிறிய குழுவினரால் உருவாக்கப்பட்டு இன்று இருபது வருடங்களைக் கடந்து பல சாதனைகளைப்புரிந்து வலுப்பெற்று நிற்பதை, சங்கத்தில் தொடர்ந்து விடா முயற்சியும் மனமுவந்த சேவைகளையும் வழங்கி பணியாற்றி வரும் தொண்டர்களின் முயற்சியே என்பதை நன்கு உணரக் கூடியதாக உள்ளது. எல்லோரிற்கும் என் பாராட்டுக்கள்.

இருந்தும் பல நயினை மக்களின் பங்களிப்பு இன்னும் கிடைக்காததை இட்டு கவலை அடைகிறேன். அனைத்து நயினை மக்களும் தங்களாலான பங்களிப்பை வழங்கவேண்டும் என கேட்டுகொண்டு, எனக்கு சங்கத்தின் முதன் முதலில் தலைமை வகிக்க கிடைத்தது பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன் என கூறிக்கொண்டு, இச் சங்கமானது மென்மேலும் வளர்ச்சிபெற எனது நல்லாசிகளும் வாழ்த்துக்களும்.

நன்றி

**த. முன்னைநாதன்**
**T. Munnainathan Bsc., MIE C.Engr**




**BALACHANDRAN MUTHAIAH**
**Professional Corporation**

**Balachandran Muthaiah LL.B.**
Barrister, Solicitor & Notary Public

2401 Eglinton Ave. E. Suite 300
Toronto, ON M1K 2M5
Ph: 416 755 5544
Fax: 416 755 5594
e-mail: balalawoffice@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்



| | |
|---|---|
| போசகர்கள்: | திரு. நா. கணபதிப்பிள்ளை |
| | திரு. பொ.கயிலாசநாதன் |
| | திரு த. சிறிபதி |
| | |
| தலைவர்: | திரு. த. முன்னைநாதன் |
| உப தலைவர்: | திரு. சோ. சந்திரசேகரம் |
| காரியதரிசி: | திரு. சபா வரதராஜா |
| உப காரியதரிசி: | திரு. ந. சிறிமுருகதாசன் |
| தனாதிகாரி: | திரு. க. குலசிங்கம் |
| பத்திராதிபர்: | திரு. ந. சுதர்சன் |

## நிர்வாகசபை உறுப்பினர்கள்

திரு. செ. பிரபாகரன்
திரு. சி. சிவகுமார்
திரு. ப. சுதாகரராஜா
திரு. ச. உமாசுதன்
திரு. சோ. ஞானேஸ்வரன்
திரு. சு. குலமோகன்
திரு. ந. துரைராஜா
திரு. சி. தவவினாயகன்
திரு. அ. சதானந்தன்

## இளைஞர் அமைப்பு (உபகுழு)



திரு. சி. முருகவேள்
திரு. ந. ஜெயசிவதாசன்
திரு. க. நவநீதன்
திரு. இ. ஞானச்சந்திரன்
திரு. க. சுதாகரன்
திரு. ச. சிறிஸ்கந்தராஜா
திரு. யோ. பிரகாஸ்
திரு. செ. விமலாநந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



சக்தி பீடங்களுள் புவனேஸ்வரி பீடமாகவும், ஆன்மீக பூமியாகவும் விளங்கும் நயினாதீவில் தோன்றிய நன்மக்களால் மேன்மைகொள் கனடா நாட்டில் உருவாக்கப்பட்ட சமய சமூகப் பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனமாக நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம் திகழ்ந்து வருவதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இச்சங்கமானது கடந்த இருபது ஆண்டுகளைக் கடந்து வந்துள்ளது என்று கூறுவதைவிட கடந்த இரண்டு தசாப்தங்களில் பலவற்றையும் வென்று வெற்றிவாகையுடன் விளங்கி வருகின்ற பெருமைக்குரிய சங்கம் எனும் சிறப்புக்குரியது என்று கூறுவதில் பெருமையடைகின்றோம். எங்கள் பண்பாட்டுப் பாரம்பரியங்களை எங்கும் அழியாமல் காப்பாற்றி நிலைநிறுத்தும் உயரிய நோக்கோடு வருடா வருடம் சித்திரைத் திங்களில் "தீபம" நிகழ்வை திக்கெட்டும் புகழ்மணக்கும் படி ஒழுங்குபடுத்தி பெருவிழாக் கொண்டாடிவரும் இச் சங்கப் பேரன்பர்களை மனநிறைவோடு வாழ்த்துகின்றோம்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்ற வானிலும் நனி சிறத்தனவே"என்ற உளவுணர்வுடன் நயினை மக்களுக்கு கல்விப்பணி, மருத்துவப்பணி, வாழ்வாதாரப்பணி எனப் பன்முகப்பட்ட பணிகளை இச்சங்கம் செய்வது பெருமைக்குரிய விடயமாகும்.

நயினைத்தாய் பெற்றெடுத்த மண்ணின் மைந்தர்கள் தாம் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் நயினைத்தாயின் மீது அளவற்ற அன்பு செலுத்தும் மாண்பைக் காண்டின்புற முடிகின்றது.

மன மகிழ்வுடன் கொண்டாடும் இருபதாவது இத்தீப நிகழ்வில் நம்மையும் ஒரு பொருளாக மதித்து நினைந்து கௌரவிக்க அழைப்பு விடுத்திருக்கும் நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச்சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர் அனைவரையும் மனம் மொழி வாக்கால் வாழ்த்துகின்றோம். எங்கள் குல தெய்வம் அன்னை ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் அருட்பெருங் கருணையையும் வியந்து நிற்கின்றோம்.

அன்பே சிவம்

**பேராசிரியர் மா.வேதநாதன் Ph.D.,**
**தலைவர், இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**

# சிறப்பு விருந்தினரிடமிருந்து....

### முன் மாதிரியா திகழும் சைவத்தமிழ்ச் சங்கம்



அண்மைக்கால இந்திய அரசியலில் பீகார் மாநிலத்தில் பல சிறிய அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து மெகா கூட்டணியை அமைத்து மிகப்பெரிய வெற்றியை நிலை நாட்டின இதுதான் ஒற்றுமையின் பலம்.

தமிழ் நாட்டிலும் வேற்றுமையில் ஒற்றுமை என வெவ்வேறு கொள்கையில் உள்ள 6 கட்சிகள் ஒன்று சேர்ந்து வைகாசி 16ம் திகதி தேர்தலை சந்திக்க உள்ளன.

புலம் பெயர் நாட்டில் இருபது வருடங்களாக ஒரு ஊர்ச்சங்கம் சைவத்தமிழ் கலை கலாச்சார நிகழ்வுகளை நடாத்திவருவது எவ்வளவு சிரமம் என்பது பலருக்கு தெரியாது.

ஆனாலும் நயினாதீவு கனடிய அபிவிருத்தி சங்கம் தம்மிடையே உள்ள ஒற்றுமை பலத்தால் தொடர்ந்து 20 வருடங்களாக தமது சைவத்தமிழ் கலை கலாச்சார சேவையை செய்து வருகின்றது. நயினாதீவு கனடிய அபிவிருத்தி சங்கம் மற்ற ஊர்ச்சங்கங்களுக்கு ஓர் முன்னுதாரணமாக திகழ்கின்றது.

ஒவ்வொரு வருடமும் சைவத்தமிழ் கலை கலாச்சார நிகழ்வுகளை நடாத்துவதற்கு பெரிய மேடை அமைத்து கொடுப்பதோடு மட்டுமல்லாமல் கோடை காலத்தில் உறவுகள் நண்பர்கள் ஒன்று சேர்வதற்கு ஒன்று கூடலையும் நடத்தி வருகின்றது.

இவர்கள் புலம் பெயர் மண்ணில் நடாத்தும் போட்டி நிகழ்சிகள் கனடாவில் பிறந்த தமிழ் பிள்ளைகளின் சைவத்தமிழ் அறிவை வளர்க்க பெரிதும் உதவுகின்றது.

குடும்ப ஒற்றுமை சமூக ஒற்றுமை நாட்டு ஒற்றுமை என பலமட்டங்களில் ஒற்றுமையின் பலம் நிருபிக்கப்பட்டுள்ளது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமை நீங்கலை அனைவருக்கும் தாழ்வு என்ற வசனத்திற்கிணங்க. நயினாதீவு கனடிய அபிவிருத்தி சங்கம் புலம் பெயர் மண்ணில் ஓர்முன் மாதிரியான சேவை அமைப்பாக திகழ்கின்றது என்றால் பொய்யாகாது.

**பிரபல பல்வைத்திய நிபுணர்**
**சேர. ஆதிகணபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Dear people of Nainathivu



I would like to thank you all for this opportunity to be a part of Theepam 2016. Last year, I finally had the blessing to be able to attend my very first Ammal Kovil Thiruvilla in Nainathivu. I was certainly amazed by spiritual and festive proceedings. However, what struck me most was the people. I was amazed by the amount of Nainai makkal gathering from around the world for this auspicious event.

What particularly struck me was children. I did not meet one child who was not delighted to be there. Not one of them wanted to rush back to their foreign homes. They all wanted to stay in Nainathivu. I commend all the parents who have gone to great lengths to instill this deep routed sense of culture and tradition in their children. They all clearly knew where their motherland was and where they belonged. It truly was a sight to behold.

Nainathivu was nothing like I had imagined. The palm fringed beaches, the sea breeze, the colors and the vibrancy were all overwhelming. I too felt like a kid. I hear that our Nainathivu has changed rapidly over the past several years. However, there remains much to be done. Roads need repairs, schools need upgrades and the hospital needs to be modernized. Indeed, it is our collective efforts that is required to achieve all this. Bringing us all together to accomplish this common goal is the very foundation of Theepam's work.

I am so grateful to all of the organizers of this event. Not only for their hard work and dedication in bringing us all here today, but also in their commitment and resolve to continue improving and preserving Naniathivu for generations to come.

May our Nainai Ammal bless each and every one of you.
Thank you.
**Dr. Suganthan Kayilasanathan MD., CCFP**

# கௌரவ விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



தமிழுக்கு உயிர் கொடுத்து ஔிர வைத்து அதனை அகில உலகும் பிரகாசிக்கத் தூண்டிகளாக விளங்கும் தியாகச் செம்மல்களான நயினாதீவு – கனோடிய அபிவிருத்திச் சங்கத்தினை வழி நடாத்துகின்ற அணைத்து அங்கத்தவர்களுக்கும் பணிவான வணக்கங்கள்.

பல்வேறுபட்ட சூழல்களினால் புலம் பெயர்ந்த எமது உறவுகளின் மனதில் மகிழ்ச்சியும் எழுச்சியும் விளக்கச் சங்கம் அமைத்து முத்தமிழுடன், விளையாட்டுப் போட்டிகளையும் வேறு இன்னோரன்ன அரிய செயற்பாடுகளையும் முன்னெடுத்து வெற்றியுடன் வீறுநடைபோடுவதற்கு வழி அமையத்தமை நயினைக்கு ஒரு மைல் கல் எனலாம்.

இங்குள்ள காலநிலையைச் சவாலாக ஏற்று அதனை எதிர் கொண்டு தாக்குப்பிடிக்கும் கஷ்டமான நிலையிலும் எமது உறவுகளை ஒன்றிணைக்கும் சங்கடமான சூழலினும் தமிழினதும், சங்கத்தினது வளர்ச்சியிலும் முனைப்புக் காட்டுவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

**"ஒரு நூல் வெளிவரும் போது எத்தனையோ
சிறைக்கதவுகள் திறந்து விடப்படுகின்றன"**

இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் சங்கத்தால் வெளியிடப்படும் புதிய ஆண்டிற்கான "தீபம்" எனும் அகல் விளக்கு எமது கைகளில் தவழ்ந்து அணையா விளக்காக எட்டுத் திக்கும் பிரகாசித்து வெற்றி நடை போட்டுப் பரிமளிக்க வேண்டி நிற்கின்றேன்

தீபம் 2016 கலைவிழா சிறப்புற வாழ்த்துகிறேன்

**திரு கணேஸ்வரன் கணபதிப்பிள்ளை**
**முன்னாள் அதிபர்**
**நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/நயினாதீவு மகா வித்தியாலயம்
J/NAINATIVU MAHAVIDYALAYAM
යා /නයිනාතිවු මහාවිද්‍යාලය
Nainativu,
Sri Lanka

12/03/2016

நயினாதீவு மகாவித்தியாலய அதிபரின்
வாழ்த்துச் செய்தி

தாயகம் விட்டோடி புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நயினையின் செல்வங்களாகிய நீங்கள் நயினை மாணவர்களின் நலன் கருதி ஆக்கபூர்வமான பல திட்டங்களை நிறைவேற்றி வருகின்றீர்கள். தங்களின் கடின உழைப்பின் ஒரு பகுதியை அர்ப்பணிப்புடன் வழங்கி இவ்வூர் சிறக்க வேண்டும் என்ற சிந்தனையோடு செயற்பட்டுவரும் தங்களின் தியாகப்பணி வளரவும் தொடரவும் வேண்டும். என்பதே எமது பேரவா. தொடரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. உங்கள் எல்லோருக்கும் சகல சௌபாக்கியங்களும் நிறைவாக கிடைக்க எமது வாழ்த்துக்களை தெரிவித்து இறை ஆசியையும் வேண்டி நிற்கின்றேன். எமது வித்தியாலய மதில் கட்டும் கோரிக்கையினையும் இச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன்.

நன்றி.

பா. சிவராசா
அதிபர்.

யா/நயினாதீவு
ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்
J/NAINATIVU
SRI GANESHA KANISTA MAHAVIDYALAYAM
යා /නයිනාතිවු
ශ්‍රී ගනේස කනිෂ්ඨ මහාවිද්‍යාලය

நயினாதீவு. Nainativu,

10/03/..2016

தீபம்
கனடா
09.03.2016

## ஆசிச்செய்தி

புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழ்ந்துகொண்டு

"எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே
இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த்தரு
ளீந்தது மிந்நாடே"

என்று நயினை மண்ணை வந்தனை கூறி மனத்தில் இருத்தி வணங்கி வாழ்ந்துகொண்டிருக்கும் எங்கள் இனிய உறவுகளே, இன்று நீங்கள் அனைவரும் ஒன்றுகூடி உங்கள் இளமைக்கால நினைவுகளை மகிழ்ந்து மீட்டு, தீபம் சஞ்சிகையினை வெளியிடும் வேளையில் எமது யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயத்தின் சார்பில் வாழ்த்துரையையும், ஆசியுரையையும் வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

காலத்தின் தேவை கருதி நயினை மண்ணிற்கு நீங்கள் அளித்துவரும் உதவிகளினால் நயினை மண் தலைநிமிர்ந்து நிற்பதை உணருகின்றேன். தற்போதைய தொழில் நுட்பமாற்றத்திற்கு ஏற்பவும் கல்வித்தரவிருத்தியில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கு தங்களின் பூரண ஒத்துழைப்பினை கணேசாத்தாய் வேண்டிநிற்கின்றாள். உங்களுடைய உதவிகள் பெருகி நயினை மண்ணை வளங்கொழிக்கும் அறிவு பீடமாக மாற்றுவோம்

அன்புடன்

யோ.திரவியநாதன்
திருமதி யோ.திரவியநாதன்

Mrs.Y.Thiraviyanathan Med.
Principal
J/Nainativu
Sri Ganesha Kanista Maha Vidyalayam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா / நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்

# J/ NAINATIVU SRI NAGAPOOSHANY VIDYALAYAM

Ward No 2
Nainativu.

10/03/2016

வாழ்த்துச் செய்தி

கனடா வாழ் நயினாதீவு மக்களால் உருவாக்கப்பட்ட நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கமானது வருடந்தோறும் வெளிவரும் தீபம் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கனடியர் அபிவிருத்திச் சங்கமானது தாம் பிறந்த தாய் மண்ணுக்கு கல்வி,சுகாதாரம்,அபிவிருத்தி போன்ற பாரிய பணிகளை பல வருடங்களாக,தொடர்ச்சியாக செய்து வருவது உண்மையில் பாராட்டத்தக்க தொன்றாக விளங்குகின்றது.

அத்தோடு கனடியர் அபிவிருத்திக் கழகத்தின் தீபம்,சஞ்சிகை வெளியீடானது சிறப்பாக நடைபெற வாழ்த்துவதுடன் அபிவிருத்திச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைவரும் நீண்ட ஆயுளோடும் சகல பாக்கியங்களோடும் வாழ எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணித் தாயினுடைய அனுக்கிரகம் கிடைக்க பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி

திரு.சபா.ஸ்ரீகரன்
அதிபர்
யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
வித்தியாலயம்

S. Srikaran
Principal
J/Nainativu Sri Nagapooshani Vidyalayam
Nainativu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிபல்லவ கலாமன்றம் - நயினாதீவு

(ஆரம்பம் 1962)

මණිපල්ලව කලාමන්‍රම් - නයිනාතිවු

# MANIPALLAVA KALAMANTRAM - NAINATIVU

**President**
R. Sivapathasegaram

**Vice - President**
P.K.Mahadeva

**Joint Secretaries**
N. Visvanathan
S.Rathnasabapathy

**Joint Treasurers**
S.Thanabalasingam
P.Thiruchelvam

**Competition's Secretary**
S.Thillainathan
N.K.Thuraimany

**Auditor**
P.N.Uruthiralingam

**Executive Commitee**
N.Loganathan
V.V.Yogalingam
N.Selvanathan
S.SubhasChandrabose
M.Punithanathan
R.P.Sritharasingh
Dr.V.Vethanathan
R.Thiravianathan
S.Ganeswaran
P.Chandrakumar

**Editorial Board**
**Chairman**
P.K.Mahadeva
**Secretary**
S.Thillainathan

**Commitee**
R.Sivapathasegaram
S.Rathnasabapathy
P.N.Uruthiralingam
P.Thiruchelvam
R.P.Sritharasingh

வாழ்த்துச் செய்தி.

உயர்வு கொண்ட ஈழத்தின் தொன்மை மிகு பகுதிகளில் நயினாதீவும் ஒன்று. சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடமாக அமைந்த தாயின் திருக்கோயிலின் பெருமையும் மணிமேகலை, புத்தபெருமான், நயினைச் சுவாமிகள் போன்றோரது திருவடிகள் பட்ட பெருமையும் தீவின் தனித்துவப் புகழ்களாம். தெய்வ வழிபாடு, தமிழ்ப்பற்று, கலாசார விழுமியம் முதலியவற்றில் முதிர்ந்த பாரம்பரியத் தமிழர்கள் வாழும் மண் நயினாதீவு. இத்தகைய பெருமையுறு மண்ணில் உதித்து புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழும் எம் உறவுகள் நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கம் என்ற அமைப்பை 1996 ஆம் ஆண்டில் அமைத்துப் பல வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றனர். ஒன்றுகூடல்களை நடாத்தி தம் இருப்பை புலம்பெயர்ந்த நாட்டில் மொழி, பண்பாடு, கலைகள் என்பன செழுமை செய்வதுடன் பேணி வளர்த்தும் வருகின்றனர். அத்துடன் தமது தாய் மண்ணின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்து வருகின்றனர். கிராமத்தின் ஆலயங்கள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கு அவற்றின் பணிகள் சிறக்க பெரு நிதியுதவியும் புரிந்ததுடன் சுடலை மயானத்தை புனரமைப்புச் செய்துள்ளனர். நயினாதீவு புனித கல்வி வளர்ச்சிக்கு பெரு நிதியுதவி வழங்கியுள்ளனர். ஆலய வழிபாட்டுக்கு இசைக்கருவிகள் வழங்கியுள்ளனர் ... செய்தும், ஆலம் ... நமது கலாமன்றத்துக்கும் மேடை அரங்குடன் இணைந்து நோயுற்ற ... அறையை அமைத்துதவியுள்ளனர். நலிந்த, நோயுற்ற ஏழைக் குடும்பங்களுக்கு உதவி வருகின்றனர். இன்னும் இவை போன்ற பல பணிகளால் நயினை மண்ணும் பயன் பல பெற்று வருகின்றன. சங்கத்தினரை பாராட்டி மகிழ்கின்றேன்.

முன்னைத் தென்பதை கூறி

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே"

என்ற தாயுமானவர் வாக்குக்கமைந்த தங்கள் பணிகள் உள்ளன. உள்ளம், உடல், மனம், வாக்கு, காயம் உயர்வு என்பதற்கிணங்க எல்லோர்க்கும் ஆகிய திரிகரண சுத்தியுடன் ஆற்றும் பணிகளால் நன்மைகள் பெருகும்.

"பயன் தூக்கார் செய்த நன்றி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

தங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் பலர் நமது மணிபல்லவ கலாமன்றத்தில் உறுப்பினர்கள் என்பதுடன் மன்றத்தின் பொறுப்பான பதவிகளை அலங்கரித்துப் பணியாற்றியவர்கள் என்பதையும் எண்ணி மகிழ்கின்றோம்.

# மணிபல்லவ கலாமன்றம் - நயினாதீவு

(ஆரம்பம் 1962)

## මණිපල්ලව කලාමන්රම් - නයිනාතිවු

## MANIPALLAVA KALAMANTRAM - NAINATIVU


**President**
R. Sivapathasegaram

**Vice - President**
P.K.Mahadeva

**Joint Secretaries**
N. Visvananthan
S.Rathnasabapathy

**Joint Treasurers**
S.Thanabalasingam
P.Thiruchelvam

**Competition's Secretary**
S.Thillainathan
N.K.Thuraimany

**Auditor**
P.N.Uruthiralingam

**Executive Commitee**
N.Loganathan
V.V.Yogalingam
N.Selvanathan
S.SubhasChandrabose
M.Punithanathan
R.P.Sritharasingh
Dr.V.Vethanathan
R.Thiravianathan
S.Ganeswaran
P.Chandrakumar

**Editorial Board**
**Chairman**
P.K.Mahadeva
**Secretary**
S.Thillainathan

**Commitee**
R.Sivapathasegaram
S.Rathnasabapathy
P.N.Uruthiralingam
P.Thiruchelvam
R.P.Sritharasingh


தங்களின் பல்வேறு பிரச்சினைகளின் மத்தியிலும் தாய்மண் மீது கொண்ட பற்றுக் காரணமாக நீங்கள் ஒன்றாகக் கூடிச் சங்கமமைத்து வருடாவருடம் விழா எடுத்து நூல்வெளியீடு செய்வதுடன் நயினை மண்ணுக்கு நிறைக் கோர்ந்து எடுக்கச் செய்யும் பணிகளை எத்தனை பாராட்டினாலும் தகும். சங்கத்தின் தலைவர் செயலாளர், செயற்பாட்டு உறுப்பினர்கள் உட்பட மன்றத்துக்கு ஒத்துழைப்பு வழங்கி வளர்த்தெடுக்க நற்பணியாற்றும் நல்மனம் கொண்ட அனைவரும் பதினாறுவகையான செல்வங்களையும் பெற்று சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டுமென நயினை நாகபூஷணித் தாயை வேண்டி நிற்கின்றேன்.

தமிழ் மணங்கமழும் தங்கள் சங்கத்தின் 20ஆம் ஆண்டு விழா சிறப்புறவும் வெளியிடப்படும் "தீபம்" மலர் மணம் வீசி அறிவுச்சுடராக அனைவர் மனங்களையும் செழுமைப்படுத்-தவும் வாழ்த்துகின்றேன். வருங்காலச் சந்ததியினையும் எமது மண்ணின் மாண்மை அறியச் செய்து அவர்களையும் இப்பணிகளில் இணைத்துக் கொள்வீர்கள் என்பது எனது அசையாத நம்பிக்கை. வாழ்க நின் பணி, வளர்க நயினை கனேடிய அபிவிருத்திச் சங்கம்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

இ. சிவபாதசேகரம்.
(ஓய்வு நிலை அதிபர்)
தலைவர்,
மணிபல்லவ கலாமன்றம்,
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம்

**Nainativu Socio - Economic Education & Cultural Development Society**

නයිනාතිවු සමාජ ආර්ථික අධ්‍යාපන හා සංස්කෘතික සංවර්ධන සංගමය


**Hony. President**
P.K. Paramalingam SLAS I Retd
Additional Secretary (Lands)
North East Provincial Council
Trincomale, Member APSC
Tele : 011-2361816

**Hony. Vice Presidents**
T. Sivananthan
President - "Amuthasurabi"
Annathanasabai, Naninativu.
S. Ratnasabapathy
Retd. Vice Principal
Royal College - Colombo - 07
A. Sarvananthanrajah
Managing Partner
Luckshmi Bhawan - Colombo - 11
P. Parameswaran L.L.B (Cey)
Attorney at Law & Notary Public
Commissioner of Oaths

**Hony. Joint Secretaries**
P.N. Uruthiralingam
Retd. Teacher
Tele : 011-2363674
N. Panchadsaram
B.A, B. Com, Dip in Accountancy
V.J.P. International Book Shop
Colombo - 06
Tele : 011-4515024

**Hony. Treasurer**
R.R.P. Sritharasingh
Managing Director
Poobalasingam Book Depot
Jaffna - Colombo - 11
Tele : 011-2422331

**Hony. Asst. Treasurer**
V. Karunagaran
Retd. Chief Shroff - Customs

**Sub Office-Nainativu**
**Members**
S.Thillainathan JP,
B.A, Dip. in Ed, SLPS I
Director of Education – Velanai
K. Saravanapavananthan JP
B.A, Dip. in Ed, SLPS I
Principal
S. Ganeswaran
B.A, Dip in Ed
Teacher


20-04-2016.

## வாழ்த்துச் செய்தி

நயினாதீவு கனடிய அபிவிருத்திச் சங்கம் தனது 20 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்ற செய்தி உண்மையில் வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. புலம்பெயர்ந்து வாழும் நம்மக்கள் தாம் பிறந்த மண்ணின் வாசனையை தாம் சென்ற இடங்களிலெல்லாம் மணக்கச் செய்யும் கலைப்பணியும் சமுதாயப் பணியும் எம்மைப் பிரமிக்க வைக்கின்றது. தாம் எங்கே போகின்றோம். தமது எதிர்காலமென்ன என்பது பற்றிய எதுவித தொலைநோக்குமின்றிச் சென்ற எம் உடன் பிறப்புக்கள், தொல்லைகள் நீங்கி தமது சொந்தக் கால்களில் நிற்கத் தொடங்கியதும் அவர் தம் மனதில் எழுந்த எண்ணக்கரு 1996ல் நயினாதீவு கனடிய அபிவிருத்திச் சங்கத்தை நிறுவ வழிசமைத்தது என்பதே எனது தாழ்மையான கருத்தாகும்.

இருபது ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக கலை, கலாசார சமூகப் பணிகளைப் புலம்பெயர்ந்த நாடொன்றில் ஆற்றுவதென்பது, அர்ப்பணிப்பு அயரா முயற்சி, திறமையான வழிகாட்டல், மக்கள் பங்களிப்பு என்பவற்றின் வெளிப்பாடே எனலாம். கனடா நாடு அபிவிருத்தியடைந்த நாடு அதுபோன்றே அங்கு வாழும் மக்கள் மனமும் அகன்ற நோக்குக் கொண்டது. இன, நிற, மத, மொழி வேறுபாடின்றி எல்லோரும் இப்பூமித்தாயின் பிள்ளைகள் போல் வாழ்வதாற்றான் இத்தகைய விழாக்களையும், கலாசார விழுமியங்களையும் பாதுகாத்து நடாத்த உதவியாகவுள்ளன.

இருபதாவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் 'தீபம்' இதழ் சிறக்கவும் எம்மக்களின் முயற்சிகள் மேன்மேலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் எமது சங்கத்தின் சார்பில் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். கலைப்பணிகளும் சமூகப் பணிகளும் தொடரட்டும் மனதில் உறுதி வாக்கினில் இனிமை, நல்ல நினைவு, இவையெம்மை வழிநடத்தட்டும் அம்பிகை அருள் பாலிப்பாளாகுக.

இங்ஙனம்

(க.பரமலிங்கம்)

தலைவர்

No. 20, Vivekanantha Road, Wellawatte, Colombo- 06, Sri Lanka. Tele : 011-2586496

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகம் பித்தானியா

## NAINAI MANIMEKALAI WELFARE ASSOCIATION UK

Estd 1995 - Registered Charity No. 1068522

75 Largewood Avenue- Surbiton- KT6 7NX- Surrey



**Patrons:**
Mr. M.Chanthirabalan
Mr. A Panchananthgarajah

**President:**
Mr. T.Jeevendran

**Secretary:**
Mr. A.Yasothararajah

**Treasure:**
Mr. N.Krishna

**Vise President:**
Mr. E.Gunaratnam

**Assistant Secretary:**
Mr. N.Kamalananthan

**Assistant Treasure:**
Mr S.Varathanathan

**Public relations officer South:**
Mr. K.Puvaneswara

**Public relations officer North:**
Mr. P.Jegatheeswaran

**Public relations officer West:**
Mr. K.Ganeshapathy

**Public relations officer East:**
Mr. K.Rameswaran

**Committe Members:**
Mr. S.Nishanthan
Mr. V.Tharmakulasingam
Mr. S.Viththiyaruban
Mr. R.Kasinathan
Mr.S.Kugendiran


பேரன்புக்குரிய மண்ணின் உறவுகள் அனைவருக்கும் வணக்கம். முதலில் வாழ்த்துச் செய்தி அனுப்ப வாய்ப்பளித்த நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கத்தின் அன்பு உள்ளங்களுக்கு நன்றி கலந்த வணக்கம். .

. ஒரு பறவை எங்கே பறந்தாலும் , எங்கே சிறகை விரித்தாலும் , அதன் பந்தம் கூடிருக்கும் மரக்கிளைதான். பெற்ற தாயோடும் , பிறந்த மண்ணோடும் நாம் கொண்ட பந்தம் மகத்தானது. நாம் பிறந்த மண்ணை பிரிந்து கடல்கள் , தரைகள் கடந்து எத்தனை ஆயிரம் மைல்கள் தாண்டி வாழ்ந்தாலும் , நாம் பிறந்த மண்ணிற்கு ஒரு பெருமை என்றால் பூரித்துப் போவதும் , ஒரு அவலமென்றால் துடிதுடித்து போவதும் எம்மை அறியாமலேயே நடந்து விடுகின்றன. காரணம் இது எம் உயிரில் கலந்த உறவு. . உப்பு காற்றைச் சுமந்துகொண்டு அந்த மண் வறண்டு கிடந்தாலும், அது எங்கள் சொர்க்க பூமி . கந்தையானாலும் தாய்மடிபோல் ஒரு சுகம் வருமா . அந்த மண்ணில் நாம் வளர்ந்த காலத்தில் எதையெல்லாம் இழந்து இருந்தோமோ , எவற்றுக்காக ஏங்கினோமோ , எதனால் எமது வாழ்வு திசை மாறியதோ , அவற்றையெல்லாம் இன்று எமது மண்ணில் வாழ்பவர்களும் , வரும் காலத்தில் வாழப்போகின்றவர்களும் அனுபவிக்கவேண்டும் , என்ற உயர்ந்த சிந்தனையுடன் , மண்ணின் தேவை அறிந்து சேவை ஆற்றிவரும் நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கத்தினரின் செயற்பாடுகள் பாராட்டப்பட வேண்டியவை . எவ்வளவு கூரிய அம்பிற்கும் ஒரு வில் தேவைப்படுகிறது . ஒரு நல்ல செயல் திட்டம் செயல் வடிவம் பெற ஒரு நல்ல அமைப்பு தேவைப்படுகிறது , அத்தகைய ஒரு அமைப்பாக நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கம் இருந்துகொண்டு , உயர்வுக்காக ஏங்கிக் கிடக்கும் எமது நயினை மண்ணிற்கு எத்தனையோ சேவைகளைச் செய்து வருவதை கண்கூடாக கண்டவன் என்ற வகையில் பெருமிதமடைகின்றேன் . மென்மேலும் உங்கள் பணிகள் சிறக்க எனது சார்பிலும் , எங்கள் கழகத்தின் சார்பிலும் வாழ்த்துக்களை தெருவித்துக் கொள்கின்றேன் . எம் கடன் பணி செய்து கிடப்பதே.

நன்றி

அன்புடன்

ஜீவா திருலிங்கநாதன்

தலைவர் நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகம் பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tamilischer Kultur und Wohlfahrts verein Essen e.V
**தமிழர் கலாச்சார நற்பணி மன்றம்** (1985). VR:297
AM-Ringofen.21 45355 Essen
Tel: / Fax:201 / 330 75 24
E-Mail: wijayan@live.de

19.42016

# இதயம் கனிந்த வாழ்த்துக்கள் !

புலம் பெயர்ந்தாலும் மனம்பெயராமல்,பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததென்ற கொள்கையோடும்,நாம் பிறந்த மண்ணிற்கும் தேசத்திற்கும் புலம்பெயர்ந்து வாழும் மண்ணிற்கும் தேவையறிந்து அரும்பணியாற்றி வருகின்ற கனடாவாழ் நயினை உறவுகளின் வேடந்தாங்கலாக சிறப்போடு பரிணமிக்கும் கனடா நயினை அபிவிருத்தி சங்கம் தனது இருபதாவது ஆண்டு நிறைவை கொண்டாடும் இவ்வேளையில் மட்டற்ற மகிழ்வோடு வாழ்த்தி நிற்கின்றேன்.

நீங்கள் கடந்து வந்த கடினமான சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் தகர்த்து இன்று பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர்களாகி நிற்கிறீர்கள்.பாராட்டுக்கள் வாழ்த்துக்கள்.

- பிறிதொரு வீட்டை வாங்க தேவையான முற்பணத்தை வீட்டில் இருந்து எடுக்க வேண்டுமா?
- உயர் வட்டியில் உள்ள மோட்கேஜ்ஜை குறைந்தவட்டியிலுள்ள மோட்கேஜ்ஜாக மாற்ற வேண்டுமா?
- சொந்த தொழில் செய்பவர்கள் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- புதிதாக கனடாவுக்கு வந்தவர்கள் மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- வெளிநாட்டில் உள்ளவர்கள் கனடாவில் வீடுவாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- பெற்றோர் பிள்ளைகளுக்கு வீட்டை மாற்றி மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- கிறடிற் பிரச்சினை *(Consumer Proposal, Late payments, previous bankruptcy)* ஆனால் வீடு வாங்க மோட்கேஜ் எடுக்க வேண்டுமா?
- அவசர தேவைக்கு *2nd Mortgage* எடுக்க வேண்டுமா?
- வியாபாரம் ஒன்றை வாங்க வியாபாரக்கடன் எடுக்க வேண்டுமா?
- உங்கள் வியாபாரத்தை மேம்படுத்த வியாபாரக்கடன் எடுக்க வேண்டுமா?
- ஒவ்வொருவருடைய நிதிநிலைமைக்கேற்ற பொருத்தமான மோட்கேஜ் எடுக்க

## என்னை முதலில் அழையுங்கள்

# 416.873.5780

**Residential & Commercial**
**Private Funds for Emergency Mortgages**
**1st Mortgage & 2nd Mortgage**

**VERICO®**
**MORTGAGE BROKERS NETWORK**

Each VERICO Broker is an independent owner operator. ® registered trademark of VERICO Financial Group Inc.

**VERICO The Mortgage Leaders Inc.** (Lic. #10238)

**Kethes**
**Sivasubramaniyam**.AMP

*Mortgage Agent - (Lic # M08006105)*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# South Asian Music Academy Of Ontario



Director
Isai Kalaimani
Kulanayaki Vivekananthan B.A (Hons).

80C Nashdene Road, Unit #71, Scarborough, ON, M1V 5E4 (Middlefield & Finch)

**Tel: 647-339-4730, 905-294-7226**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ideal Auto Tech

For all your domestic and imported vehicle repairs and services

**Tel: 416-752.LUBE(5823)**
**Fax: 416-752-0457**

Make lasting memories

# Sudar Photography

சுடர் ஒளிப்படம்

**647.709.0414**
sudarphotos2@gmail.com
www.facebook.com/sudarphotos2

Wedding
Birthday
Puberty ceremony
Baby portraits
Dance portraits
Family portraits
Business portrais
and other special occassions





**Digital print Album, Album box, Photos slideshow, Custom Frames, Special occassions welcome picture frame**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAVEEN TAX



* Book Keeping & Accounting Services
* Personal Tax & E-Filing
* Self Employment Tax Filing
* Corporate Tax Services

**Fast & Accurate Tax Service**

* Investment Advice RRSP & LSRSP
* Resume / Cover Letter Preparation
* Business Registration & In-corporation
* HST Filing & Payroll remittance

**Ravi: 416 . 579 . 4502**

**2641 Eglinton Ave, East (Inside SP Electronics) Brimley & Eglinton**

தீபம் 18 வது ஆண்டு கலை நிகழ்வு சிறப்புற வாழ்த்துகிறோம்.



# EMBASSY RESTAURANT

Samosa's King

*Dine in Take Out and Catering Banquet Hall*

*We undertake catering for all occasions*

**Tel: 416.332.0944, 416.412.1793**

**Fax: 416.332.4789**

5210 Finch Avenue East, 6-12,
Scarborough, ON M1S 4Z4





"உங்கள் தேவையே எமது சேவை"

# ராஜாராம் உணவுச்சேவை

அறுசுவை அமுதை ராஜரீகத்தில் பணிவுடன் படைத்திடுவோம்



**தரமான பாகம் தவறாத நேரம் தரமோ நிரந்தரம்**

திருமணமா, பிறந்ததினமா, கல்லூரியின் அல்லது ஸ்தாபனங்களின் வருடாந்த விழாக்களா, வேறு வைபவங்களா, அந்தியஷ்டியா, திவசமா, மற்றும் வீட்டில் நடக்கும் சிறுவைபவங்களா எதுவானாலும் அழையுங்கள் வகை செய்வோம்.

காலை 9:00 மணிமுதல் மாலை 8:00 மணிவரை

www.rajahram.com

**Tel: 416-299-5200 Fax: 416-299-5795**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Karuna Gopalapillai**
Real Estate Broker / CEO

HOMELIFE
HIGHER STANDARDS



**HOMELIFE GALAXY REAL ESTATE LTD. BROKERAGE**

111 Grangeway Avenue, Suite #301
Toronto, ON. M1H 3E9
Email: karuna@homelifegalaxy.ca
Web: www.homelifegalaxy.ca

Tel: 416.284.5555
905.550.3333
Mobile: 416.830.8520
Fax: 416.284.5727

*"Where Education, Experience and Expertise brings Success"*

மிஸிஸாகா, பிரம்ரன், எற்றோபிக்கோ மக்கள் இதுவரை கண்டிராத மிகப் பிரமாண்டமான காட்சியறையுடன்

# அக்ஸ்யாஸ் பஷன்

2014க்கான New Design சேலைகள் புதிய டிசைன் கூறை சேலைகள்
காஞ்சிபுரம், Cut Work Sarees, Fancy சேலைகள்
பெண்களுக்கான New Design பஞ்சாபிகள், சிறுவர் சிறுமிகளுக்கான
ஆடைகள், ஆண்களுக்கான ஆடைகள், Fancy நகைகள், கைக்கடிகாரம்
அன்பளிப்பு பொருட்கள், பரத நாட்டிய பொருட்கள் இன்னும் பல.....

*03- 60 Dundas Street, Mississauga, ON*
*(Dundas and Hurontario KFC க்கு அருகில்)*

**Tel: 905-306-7052**
**Fax: 905-306-7382**



**இது ஓர் பட்டுப் பூங்கா**

**தீபம் 2015 வெற்றிபெற வாழ்த்துக்கள்**



**19 ஆவது ஆண்டில் கால்பதிக்கும்**

# ஈழநாடு

**ஒரே நேரத்தில் 6 நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு பத்திரிகை...**

**Tel: 905 - 653 - 3000 | Cell: 416 . 841 . 9600**
**Fax: 905 . 653 . 4031**
**P.O. BOX 878, STATION 'Q' TORONTO, ON, CANADA M4T 2N7**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Call me for all your Real Estate needs...*




**Visva Vythilingam**
Sales Representative

**Affiliate Realty Inc.** Brokerage*
** Each office independently Owned and operated*
**416-290-1200**

BABA BANQUET HALLS
*"Where fantasies step into reality"*
(416) 335-3334

BB

Sathiya's
சின்னக்கடை மீன் சந்தை
**CHINNA KADAI FISH & MEAT MARKET**



*Fresh, Frozen Sea Food*
*Fresh Meat*
*East & West Indian Groceries*
*and much more....*

**3005A Islington Ave, (between Steels & Finch)**
**Tel: 416.740.1384**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதிர்ந்த எம் உறவுகளை 19வது ஆண்டு மலரில் மீண்டும் நினைவு கூருவோம்!

எம்மோடு இக் கனடா மண்ணில் வாழ்ந்து அமரத்துவமடைந்த எமது ஊரை தாய் நிலமாகக் கொண்டவர்களின் பெயர்விபரங்களை இத் தீபம் – 2011 சிறப்பு மலரில் பதியப்பட்டு அவர்களுக்கான அகவணக்கத்தை செலுத்துவதில் நயினாதீவு கனடிய அபிவிருத்திச் சங்கம் நெகிழ்வடைகிறது. இவர்களை இழந்து தவிக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், சங்கம் ஆறுதலையும், தேறுதலையும் வழங்குகின்றது. அத்துடன் இவ்விபரங்கள் மிகக்குறுகிய காலத்தில் எம்மால் சேகரிக்கப்பட்டு இங்கு நிரல்படுத்தப்பட்டுள்ளது. இவ்விபரக்கொத்தில் எமது உதிர்ந்த உறவுகளில் யாராவது தவறவிடப்பட்டிருந்தால் அதற்காக அவ்வுறவின் உறவினர்களிடம் சங்கம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுடன் அடுத்த ஆண்ட மலரில் கண்டிப்பாக அவ்விபரம் இணைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. திரு. இராமச்சந்திரர் குமரையா
2. திருமதி. குமரையா மங்கையற்கரசி
3. திரு. கந்தையா மயில்வாகனம்
4. திரு. முத்தர் இராமலிங்கம்
5. திரு. குணரட்ணம் ஜீவானந்தன்
6. திரு. கனகசபை கதிரவேற்பிள்ளை
7. திரு. சோமசுந்தரம் கந்தசாமி
8. திரு. சபாரட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா
9. திரு. அருமைநாயகம் ஸ்ரீகாந்தன்
10. திரு. தம்பையா தருமலிங்கம்
11. திருமதி. தவநாயகபதி பிரகாசபாக்கியாம்பாள்
12. திரு. மயில்வாகனம் மகாலிங்கம்
13. திருமதி. மகாலிங்கம் தில்லைவனம்
14. திருமதி. குணரட்ணம் விசாலட்சி
15. திரு. தில்லையம்பலம் குலசிங்கம்
16. திருமதி. தாமோதரம்பிள்ளை முத்தாச்சி (முத்தம்மா)
17. திருமதி. கனகரெத்தினம் விமலாதேவி
18. திருமதி. கணபதிப்பிள்ளை சௌந்தரம்
19. திருமதி. முத்தையா செல்லாச்சி
20. திரு. கு. வை. முத்தையா
21. திரு. நடராசா மணிவண்ணன்
22. திரு. கணபதிப்பிள்ளை நாகராசா
23. திருமதி. இராசமோகன் சந்திரா
24. திரு. நடராசா சின்னக்குட்டி
25. திருமதி. நடராசா சுந்தரேஸ்வரி
26. திருமதி. சிவபாக்கியாம் நடராசா
27. திரு. கார்த்திகேசு கந்தையா
28. திரு. மதியாபரணம் ஸ்ரீநிவாசன்
29. திருமதி. சிவமணி மகேந்திரன்
30. திரு. தருமலிங்கம் சுதாகரன்
31. திருமதி. திலகவதி மகாலிங்கம்
32. திருமதி. சுந்தரவதனி ஸ்ரீபதி
33. திருமதி. இராஜராஜேஸ்வரி திருநாவுக்கரசு
34. திரு. முருகேசு சந்திரசேகரம்
35. திருமதி. அமுதம்மா வீரவாகு
36. திரு. பொன்னம்பலம் திருநாவுக்கரசு
37. திருமதி. இராசம்மா இராசரெத்தினம்
38. திருமதி. கனகாம்பிகை கனகசேகரம்பிள்ளை
39. திரு. நடராசா பொன்னையா
40. திரு. அம்பலவாணர் சின்னத்தம்பி
41. திருமதி. மீனாம்பாள் செல்லத்துரை
42. திரு. தம்பையா கணபதிப்பிள்ளை
43. திரு. இராமுப்பிள்ளை அப்பாத்துரை
44. திருமதி. தங்கம்மா சரவணமுத்து
45. திரு. முத்தையா கிருஸ்ணானந்தராஜா
46. திரு. இரத்தினம் யசோதரன்
47. திரு. தயாளன் மருதப்பு
48. திருமதி. சாந்தினி சுரேஸ்கரன்
49. திரு. கந்தசாமி கனகசபாபதி
50. திருமதி. கனகம்மா குமாரசாமி
51. திரு. குணரெட்ணம் சர்வானந்தன்
52. திருமதி. சாரதாதேவி நாகேஸ்வரன்
53. செல்வி. இ. துளசிவேணி
54. திரு. ராஜகதிர்வேல் பத்மேஸ்வரன்
55. திரு. சண்முகநாதன் உருத்திரநாதன்.
56. திருமதி. முத்தையா சரோசினிதேவி
57. திரு. ஆறுமுகம் யோகநாதன்
58. திரு. ஆறுமுகம் வாகீஸ்வரன்
59. திரு. இராமலிங்கம் சந்திரசேகரன்
60. திரு. வீரவாகு மகேஸ்வரன்
61. திரு. கனகசபை மருதப்பு
62. திருமதி. நிறைஞ்சனா மணிலால்
63. திரு. மு. தணிகாசலம்
64. திரு. க. வரதராசா
65. செல்வன். வி. இராகுலன்
66. திரு. செ. அமிர்தலிங்கம்
67. திரு. இ. சுப்பிரமணியம்
68. திருமதி. கு. புவனேஸ்வரி
69. திரு. மு. பொன்னுத்துரை
70. செல்வி. தீபிகா சண்முகப்பிரியா
71. திருமதி. நாகமணி செல்லம்மா
72. திருமதி. சி.வை. சபாரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர்)
73. திருமதி. வீரவாகு நாகம்மா
74. திருமதி. நாகமுத்து கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், போசகர் ந.க.அ.ச)
75. திருமதி. நாகம்மா நல்லதம்பி
76. திரு. செல்லையா நல்லையா (இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்)

குறிப்பு:

நயினாதீவை தாயகமாகக் கொண்டவர்கள் கனடாவில் அமரத்துவம் அடைந்த வேளையில் எமது சங்கமானது கண்ணீர் அஞ்சலி செலுத்தி அகவணக்கம் செய்வது வழமையான நிகழ்வாகும். சில சமயங்களில் தவிர்க்கமுடியாத காரணங்களால் கண்ணீர் அஞ்சலி செலுத்த தவறவிடப்பட்டிருந்தால் அத்தவறுக்காக சங்கம் மன்னிப்பு வேண்டி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சமய கிரியைகள் சேவை

## சிவஸ்ரீ ச. திருஞானசம்பந்தக் குருக்கள் B.A


(காரைநகர் சைவக் குருக்கள் ஸ்ரீலஸ்ரீ
சி. சுப்பிரமணிய தேசிகரின் பேரன்)

**அனைத்து சைவசமயக் கிரியைகளும் ஆகம விதிமுறைப்படி செய்து கொடுக்கப்படும். விசேடமாக இறுதிச் சடங்குகளான சூர்கேற்சவம் சமய அந்தியேட்டி கிரியைகள் சிறப்பாகச் செய்துதரப்படும்**

**பூசைக்குரிய சகல பொருட்களையும் ஆயத்தப்படுத்தி செய்து தரப்படும்**

**நீங்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்**

# 416-535-1491



**ச. திருஞானசம்பந்தக் குருக்கள்**

சைவ சிவாச்சாரியார்

திருமண பதிவாளர்

769 Lansdowne Ave.,
Toronto, ON
M6H 3Z1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவறை



**சீர் தந்து வளர்த்தெடுத்த சிறப்புறு நயினைத் தாய்**
**நேர் நின்று நிமிர்வோடு நினைவெங்கும் வலம் வருவாள்.**
**பார் எங்கும் வாழும் பிள்ளைகளாம் நாமும்**
**ஊரின் உன்னதத்தை உணர்வோம், உணர்த்திடுவோம்.**

நயினாதீவு, நாம் பிறந்த தாய்மடி, நாம் துயின்று எழுந்த தூளி, நாம் ஓடி விளையாடிய முன்றில். நாம் வாழ்வு பயின்ற பல்கலைக்கழகம். நாம் வளர்ந்த தாய் வீடு. எம்மை வளர்த்த சொந்த மனை. எமக்கு அமுதூட்டி வளர்த்த அன்னை பூமி. எமது ஊர், எமது ஊர் என்று நினைத்து, நினைத்து உவகை கொள்ளும் எமது மண். அருள் ஆட்சி செய்யும் அம்பிகையின் அருட் கடாட்சம் ஒளிரும் புண்ணிய பூமி. புனிதர்கள் வாழ்ந்த பழந் தமிழ் வரலாற்று மண்.

இந்தப் புண்ணிய பூமி, ஈழத்து வரலாற்றிலும், இலக்கிய வரலாற்றிலும், இந்து சமய வரலாற்றிலும், இடப் பெயர் வரலாற்றிலும் வணிக வரலாற்றிலும் வரலாறு வாயிலாகப் பல பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு தொன்மை மிக்க தமிழ்த் தீவு ஆகும்.

யாழ்ப்பாணத்திலிருந்து, தென் மேற்கே, பதினெட்டு மைல் தூரத்தே அமைந்துள்ள இத் தீவு, ஒரு மைல் நீளமும் ஒன்றரை மைல் அகலமும் கொண்ட மிகச் சிறிய எழில் சூழ்ந்த ஒரு தீவு ஆகும். நயினார்தீவு, மணிபல்லவம், பூந்தோட்டம், நாக நயினார்தீவு, பிராமணத்தீவு, நரித்தீவு, நாகதீவு, நாகேஸ்வரம், நாகத்தீவு, நாகதீபம் போன்ற பல பெயர்களால் தமிழில் அழைக்கப் பெற்று வந்துள்ளதோடு, சிங்கள மொழியில் நாகதிவயின எனவும், கார்லெம் என்று டச்சு மொழியிலும் அழைக்கப் பெற்று வந்துள்ளது.

இந்துமா சமுத்திரத்தில், தென் இந்தியாவுக்கு மிக அருகில் அமைந்துள்ள நயினாதீவு, பூகோள ரீதியாக மிக முக்கியமான இடத்தில் அமைந்து காணப்படுகின்றது. இத் தீவில், ஏறக் குறைய 14.000 வருடங்களுக்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்திருக்க வேண்டும் என்று வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தொன்மைக் கால ஈழ வரலாற்றில் ஈழத்தில் தொல் குடிகளான நாகர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்தே இங்கு மக்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள். நாகர்கள் வாழ்ந்த இடம், நாகம் பூசனை செய்த ஊர், நயினார் பட்டர் குடியிருந்த மண், என்ற காரணங்களால் இந்த ஊர் நயினாதீவு என்று அழைக்கப் பெற்றது இந்த ஊரில், நாக இனத்தவர்களால் அமைக்கப் பெற்ற நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கர்ப்பக் கிரகத்தில் அமைந்துள்ள நாகம், 14. 000 வருடங்களுக்கு மேற்பட்டது என்று சிற்பக்கலைக் கட்டிடக் கலைப் பொறியியல் நிபுணரான திரு. எம். நரசிம்மன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**ப.'.றுளியாற்றுப் பன்மலை அடுக்கத்துக்**
**குமரிக் கோடும் கொடும் கடல் கொள்ள" ( மதுரைக் காண்டம் காடுகாண் காதை 19- 20 )**

என்ற வரிகள், சங்க காலக் குமரிக் கண்டக் கடற் கோளினைக் குறிப்பிடுகின்றன. கடற் கோளினால் பிரிந்த மாநிலங்களில் ஒன்றான நாவலந் தீவு என்றழைக்கப் பெற்ற தமிழகத்தோடு ( இந்தியா) நெருங்கிய புவியியல் தொடர்பு உடையது நயினாதீவு ஆகும். இராமேஸ்வரத்தில் இருந்து நாகம் கடலின் ஊடாகப் பூக் கொண்டு வந்து அம்மனை வழிபட்டதாகச் செவிவழிக் கதைகள் கூறுகின்றன. நயினாதீவுக்கும் நாவலந்தீவு என்று ஒரு பெயர் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

சிலப்பதிகாரச் செய்திகளின் படி, கண்ணகியின் தந்தை, கண்ணகியின் காற்சிலம்புக்காக நாக இரத்தினக் கற்களைப் பெறுவதற்காக நயினாதீவுக்கு வருகை தந்ததாகவும் பாம்பு சுற்றிக் கல்லுக்கும் கருடன் கல்லுக்கும் அதனோடு தொடர்புடைய கதைக்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும், நாகபூசணி அம்மன் ஆலய அமைவுக்கு இவர்கள் பேருதவி செய்ததாகவும் வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. இன்றும் கோயிலுக்கு அருகில் கடலில் பாம்பு சுற்றிக் கல்லும் கருடன் கல்லும் காணப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

மணிமேகலை என்ற காப்பியம், மணிமேகலா தெய்வம், மணிமேகலையை மணிபல்லவத்துக்குக் கொண்டு வந்தமையைக் கூறுவதோடு, மணிமேகலை, தனது பழம் பிறப்புக் கதையை உணர்ந்தமையையும், கோமுகிப் பொய்கையில் பசிப்பிணி நீக்கும் அட்சய பாத்திரத்தைப் பெற்றமையையும். சக்தி பீடத்தைத் தொழுது தனது முற்பிறப்பை உணர்ந்து கொண்டமையையும் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ**
**அந்தரம் ஆறாஆறு அய்ந்து யோசனைத்தென்திசை மருங்கில் சென்று திரை உடுத்த**
**மணிபல்லவத்திடை மணிமேகலா தெய்வம்**
**அணி இழை தன்னை வைத்து அகன்றது. ( மணிமேகலை. சக்கரவாகக் கோட்டமுரைத்த காதை 210-215)**
**பொலங்கொடி நிலமிசைச் சேர்ந்தெனப் பொருந்தி**
**உன்திருவருளால் என்பிறப்புணர்ந்தேன். ( மணிமேகலை. மந்திரங் கொடுத்த காதை.17-18)**

மணிமேகலையில், மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை. ,பாத்திரம் பெற்ற காதை, ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை, ஆதிரை பிச்சையிட்ட காதை போன்ற காதைகளிலும் மணிபல்லவம் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

மேலும், பல்லவ மன்னன் தொண்டை மான் இளந்திரையன் நயினாதீவில் பிறந்தமையும்,. இக்குழந்தை பிறந்தவுடன் தாய் பீலிவளை கம்பளச் செட்டியாரிடம் கொடுத்துப் பூம்புகாருக்கு அனுப்பினாள் என்றும், படகு கடலில் கவிழ்ந்து குழந்தையின் தொண்டையில் நீரத் தாவரங்கள் சிக்கியபடி ( ஆதொண்டைச் செடி) குழந்தை தொண்டை மண்டலக் கரையை அடைந்ததாகவும் அதனால் அக் குழந்தை தெண்டைமான் இளந்திரையன் என்று அழைக்கப் பெற்றதாகவும். மணிபல்லவத்தில் பிறந்மையினால் தொண்டைமான் இளந்திரையன் சார்ந்த மன்னர்கள் பல்லவர்கள் என்று அழைக்கப் பெற்றனர் என்றும் யாழ்ப்பாணச் சரித்திரம். மணிமேகலை போன்ற இலக்கியங்களில் காணப்படும் வரலாற்றுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆபுத்திரன் அட்சய பாத்திரத்துடன் நயினாதீவுக்கு வருகை தந்துமையையும், கோமுகிப் பொய்கையில் அட்சய பாதிதிரத்தை விட்டுச் சென்றமையையும் மணிமேகலை கூறுகின்றது. சோழ மன்னர்களது படைகள் நாகமணிகளைப் பெறுவதற்காக நயினாதீவுக்கு வருகை தந்தமையைக் கண்ணகி வழக்குரை என்ற இலக்கியம் குறிப்பிடுகின்றது.

**நசையாத நாக தீவில் நாகத்தின் மணி வாங்க**
**கசிவான மனதுடனே கடுகவுமை அழைத்தோம் காண். (கண்ணகி வழக்குரை )**

அருச்சுனன் மணி பல்லவத்திற்கு வந்து நாகன்னியை மணந்தான் எனவும். நாக கன்னிக்கும் அருச்சுனனுக்கும் பிறந்த மகனே பப்பிரவாகன் என்று அழைக்கப் பெற்றான் எனவும் கருதப் பெறுகின்றது.( ஊரில் பப்பிரவாகன் சல்லி என்ற ஒரு இடம் உண்டு)

ஊரின் பெயருக்குப் பல வரலாறு சான்ற மூலாதாரங்கள் இருப்பதைப் போன்று, ஊரில் உள்ள இடப் பெயர்களும் பல வரலாற்று ரீதியான காரணங்களினால் வைக்கப் பெற்ற காரணப் பெயர்களாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். அவற்றுள் பல பெயர்கள் இன்று பேச்சு வழக்கில் மருவிக் காணப்படுகின்றன. சில பெயர்கள் வழக்கொழிந்து போயுள்ளன

எடுத்துக்காட்டாக
கத்தியாள் குடா என்ற இடம் கத்தியாக்குடா என்று அழைக்கப் பெறுகின்றது. (ஐந்து தலை நாகமாக உருமாறி மதுரையில் இருந்து வந்த கண்ணகி, கோபம் தீராத நிலையில் நின்று கத்திய இடம்.) இத்தகைய செய்திகள் நாட்டார் இலக்கியத்திலும், கண்ணகி வழக்குரை போன்ற இலக்கியங்களிலும் உள்ளன. ஈழத்தில் காணப்படும் கண்ணகி அம்மன் வழிபாட்டுக்கும், நாகபூசணி அம்மன் வழிபாட்டுக்கும் தொடர்பு உள்ளதாக இந்துசமய நூல்கள் கூறுகின்றன.

பூகோள ரீதியாகவும், இந்துமா சமுத்திரத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் ஒரு தக்க இடத்தில் அமைந்துள்ள நயினாதீவு, கப்பல்கள் வந்து செல்வதற்குரிய நல்ல இறங்கு துறையாகவும் இருந்துள்ளமையைப் படகுத்துறை, உவான்துறை, துடரித்துறை, வாகையடித்துறை போன்ற ஊரின் இடப் பெயர்கள் விளக்குகின்றன தையலியாசி என்ற பெண் நயினாதீவின் பொருளாதாரத்தில் பெரிதும் முக்கியத்துவம் உடையவளாகக் கருதப்பட்டாள். நான்காம் வட்டாரத்தில் உள்ள ஆசியான் பத்தி .என்ற இடத்தில் தனது கணவனோடு வாழ்ந்த இப் பெண, முத்துக்குளிப்பதிலும் உள்நாட்டு, பிற நாட்டு வணிகத்திலும் மிகவும் முக்கியம் வாய்ந்தவளாக விளங்கினாள்.

புத்தர் நயினாதீவுக்கு வந்த போது, அவர் நாகவழிபாடு செய்ததாக மாகவம்சம் என்னும் சிங்கள நூல் கூறுகின்றது. வையாபாடல் என்னும் நூல் நயினாதீவில் வாழ்ந்து வந்த பட்டர்கள் மலையாள நாட்டில் உள்ள ஸ்ரீ சங்கராசாரியாரைத் தரிசிப்பதற்கு வருகை தந்ததாகக் குறிப்பிடுகின்றது.

**"நச்சுவிழி மடவார்கள் வாசம் செய்யும் நாக நயினாதீவில் வாழ்வோரும்" (வையாபாடல்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை வெளி என்ற இடம், முன்பு மிகப் பெரிய பூந்தோட்டமாக விளங்கியது தில்லைப் பூந்தோட்டம் என்று அழைக்கப் பெற்ற இங்கிருந்து சிதம்பரத்துக்குப் பூக்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் அதன் காரணமாக நயினாதீவுக்குப் பூந்தோட்டம் என்ற ஒரு பெயரும் வழக்கில் இருந்ததாக அறிய முடிகின்றது.

**அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்திக்**
**குறுகத் தறித்த குறள்.**

என்று திருக்குறளைப் பற்றிக் கூறும் கருத்துக்கு ஒத்ததுவே. நயினாதீவும் அதன் வரலாற்றுப் பெருமைகளும் ஆகும்.

இத்தகைய ஒரு புண்ணிய பூமியில் பிறந்த எம்முன்னே இன்று வரலாறு காலத்தின் கட்டாயமாக் கையளித்துள்ள கடமைகள் என்று நான் கருதுபவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1)நயினாதீவிலே பிறந்து இன்று, உலகேங்கும் புலம் பெயர்ந்து வாழும் நாம், எமது ஊர் ஒரு திராவிட மண் என்பதையும், ஈழத்தின் தொன்மை மிக்க இனமான நாகர்கள் வாழ்ந்த சொந்த மண் என்பதையும் பதிவு செய்வது மிக மிக அவசியமானது ஆகும்.

2) ஈழத்திலே கல்வித் துறை சார்ந்து. ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழ்ந்த மண் என்ற பெருமையைத் தனதாகத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் எமது ஊர் பற்றிய வரலாற்று மூலங்களைத் தேடி எடுத்துத் தக்க சான்றாதாரங்களோடு ஆவணப்படுத்த வேண்டும்.

3) எமது தீவின் படைப்பாளிகளின் படைப்புக்களைப் பத்திரப் படுத்திப் பாதுகாக்க வேண்டும்.

4) போர்த்துக் கேயர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர்களின் வரவு எமது ஊருக்கு ஏற்படுத்திய சிதைவுகளைப் பதிவு செய்ய வேண்டும். இவர்களின் வருகையின் போது வாழ்ந்தவர்களை அணுகி அவர்களின் பட்டறிவை ஒலிப்பதிவு செய்ய வேண்டும்.

5) எமது ஊரில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த பல்துறை சார்ந்த அனைவரதும் வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பட வேண்டும். பல்வேறு துறைகளில் சாதசைசெய்தவர்களின் பெயர் விபரங்கள் பட்டியற்படுத்தப்பட வேண்டும் .

6) ஈழப்போராட்ட வரலாற்றில் நயினாதீவின் நிலை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

7) நயினாதீவில் இருந்து சென்று, தம்மை தாயக விடுதலைக்கு ஈகம் செய்தவர்களின் பெயர் விபரங்களும், நாட்டுப் பற்றாளர்களின் விபரங்களும் பேணப்பட வேண்டும்.

8)நாகபூசணி அம்மன் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டுப் பற்றிய தகவல்களையும், அதில் காணப்படும் எழுத்துக்களையும் வாசித்தறியும் கல்வெட்டியல் தொடர்பான ஆய்வும் தொடங்கப் படுதல் வேண்டும். அம்மன் ஆலயத் தேரில் செதுக்கப் பெற்றுள்ள சிற்பங்கள் பற்றிய முழு விபரங்களும் சீற்பக்கலை வல்லுனர்களால், நுண்கலைக் கண்ணோட்டத்துடனும், வரலாற்றுக கண்ணோட்டத்துடனும், ஆலய வரலாற்றுக் கண்ணோட்டத்துடனும் ஆய்வு செய்யப் பட்டு தனிப்பட்ட ஆய்வு நூலாக வெளிவருதல் வேண்டும்.

9) நயினாதீவில் பல இடங்களில் தொல்பொருளியல் ஆய்வுகள் செய்யப்படும் போது மேலும் பல வரலாற்று மூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் தொல்பொருள் அகழ்வாய்வுகளுக்கான முயற்சிகள் ஆரம்பிகப் பெறுதல் வேண்டும்.

10) நயினாதீவு பற்றிய செய்திகள் கதைகள். வரலாறு, நாகபூசணி அம்மன் ஆலய வரலாறு யாவும் புலம் பெயர்ந்து வாழும் எமது பிள்ளைகள் தாமாக அறிந்து கொள்ளும் முறையில் ஆங்கிலம பிரெஞ்சு. டொச் ஆகிய மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்.

11) வளர்ந்து வரும் தொழில் நுட்ப அறிவையும், வளங்களையும் இணைத்துத் தொடர்புகளைப் பேண வேண்டும்.

12) இன்று வாழும் பெரியவர்கள் பலரையும் அணுகி, அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை ஒலிப்பதிவு செய்ய வேண்டும். எமது ஊரின் கல்விப் பாரம்பரியம் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

13) நயினாதீவின் பெருமைகள் சிறப்புக்கள், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள் போன்றவை திரைப்படமாக, நாவலாக, சிறுகதைகளாக, கவிதைகளாக கலைப்படைப்புகளாக வெளிவருதல் வேண்டும்.

14) உலகெங்கும் வாழும் தமிழ்ப் பேராசிரியர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், மொழியியல் வல்லுனர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை வெளி என்ற இடம், முன்பு மிகப் பெரிய பூந்தோட்டமாக விளங்கியது தில்லைப் பூந்தோட்டம் என்று அழைக்கப் பெற்ற இங்கிருந்து சிதம்பரத்துக்குப் பூக்கள் கொண்டு செல்லப்பட்டதாகவும் அதன் காரணமாக நயினாதீவுக்குப் பூந்தோட்டம் என்ற ஒரு பெயரும் வழக்கில் இருந்ததாக அறிய முடிகின்றது.

**அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்திக்**
**குறுகத் தறித்த குறள்.**

என்று திருக்குறளைப் பற்றிக் கூறும் கருத்துக்கு ஒத்ததுவே. நயினாதீவும் அதன் வரலாற்றுப் பெருமைகளும் ஆகும்.

இத்தகைய ஒரு புண்ணிய பூமியில் பிறந்த எம்முன்னே இன்று வரலாறு காலத்தின் கட்டாயமாக் கையளித்துள்ள கடமைகள் என்று நான் கருதுபவற்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

1)நயினாதீவிலே பிறந்து இன்று, உலகேங்கும் புலம் பெயர்ந்து வாழும் நாம், எமது ஊர் ஒரு திராவிட மண் என்பதையும், ஈழத்தின் தொன்மை மிக்க இனமான நாகர்கள் வாழ்ந்த சொந்த மண் என்பதையும் பதிவு செய்வது மிக மிக அவசியமானது ஆகும்.

2) ஈழத்திலே கல்வித் துறை சார்ந்து. ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் வாழ்ந்த மண் என்ற பெருமையைத் தனதாகத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் எமது ஊர் பற்றிய வரலாற்று மூலங்களைத் தேடி எடுத்துத் தக்க சான்றாதாரங்களோடு ஆவணப்படுத்த வேண்டும்.

3) எமது தீவின் படைப்பாளிகளின் படைப்புக்களைப் பத்திரப் படுத்திப் பாதுகாக்க வேண்டும்.

4) போர்த்துக் கேயர், ஆங்கிலேயர், ஒல்லாந்தர்களின் வரவு எமது ஊருக்கு ஏற்படுத்திய சிதைவுகளைப் பதிவு செய்ய வேண்டும். இவர்களின் வருகையின் போது வாழ்ந்தவர்களை அணுகி அவர்களின் பட்டறிவை ஒலிப்பதிவு செய்ய வேண்டும்.

5) எமது ஊரில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த பல்துறை சார்ந்த அனைவரதும் வாழ்க்கை வரலாறுகள் எழுதப்பட வேண்டும். பல்வேறு துறைகளில் சாதசெய்தவர்களின் பெயர் விபரங்கள் பட்டியற்படுத்தப்பட வேண்டும் .

6) ஈழப்போராட்ட வரலாற்றில் நயினாதீவின் நிலை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டு அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

7) நயினாதீவில் இருந்து சென்று, தம்மை தாயக விடுதலைக்கு ஈகம் செய்தவர்களின் பெயர் விபரங்களும், நாட்டுப் பற்றாளர்களின் விபரங்களும் பேணப்பட வேண்டும்.

8)நாகபூசணி அம்மன் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டுப் பற்றிய தகவல்களையும், அதில் காணப்படும் எழுத்துக்களையும் வாசித்தறியும் கல்வெட்டியல் தொடர்பான ஆய்வும் தொடங்கப் படுதல் வேண்டும். அம்மன் ஆலயத் தேரில் செதுக்கப் பெற்றுள்ள சிற்பங்கள் பற்றிய முழு விபரங்களும் சிற்பக்கலை வல்லுனர்களால், நுண்கலைக் கண்ணோட்டத்துடனும், வரலாற்றுக கண்ணோட்டத்துடனும், ஆலய வரலாற்றுக் கண்ணோட்டத்துடனும் ஆய்வு செய்யப் பட்டு தனிப்பட்ட ஆய்வு நூலாக வெளிவருதல் வேண்டும்.

9) நயினாதீவில் பல இடங்களில் தொல்பொருளியல் ஆய்வுகள் செய்யப்படும் போது மேலும் பல வரலாற்று மூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற அடிப்படையில் தொல்பொருள் அகழ்வாய்வுகளுக்கான முயற்சிகள் ஆரம்பிகப் பெறுதல் வேண்டும்.

10) நயினாதீவு பற்றிய செய்திகள் கதைகள். வரலாறு, நாகபூசணி அம்மன் ஆலய வரலாறு யாவும் புலம் பெயர்ந்து வாழும் எமது பிள்ளைகள் தாமாக அறிந்து கொள்ளும் முறையில் ஆங்கிலம பிரெஞ்சு. டொச் ஆகிய மொழிகளிலும் மொழி மாற்றம் செய்யப்பட வேண்டும்.

11) வளர்ந்து வரும் தொழில் நுட்ப அறிவையும், வளங்களையும் இணைத்துத் தொடர்புகளைப் பேண வேண்டும்.

12) இன்று வாழும் பெரியவர்கள் பலரையும் அணுகி, அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை ஒலிப்பதிவு செய்ய வேண்டும். எமது ஊரின் கல்விப் பாரம்பரியம் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

13) நயினாதீவின் பெருமைகள் சிறப்புக்கள், பெரியோர்களின் வாழ்க்கை வரலாறுகள் போன்றவை திரைப்படமாக, நாவலாக, சிறுகதைகளாக, கவிதைகளாக கலைப்படைப்புகளாக வெளிவருதல் வேண்டும்.

14) உலகெங்கும் வாழும் தமிழ்ப் பேராசிரியர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், மொழியியல் வல்லுனர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் படைப்பாளிகள். திரைப்படத் துறை சார்ந்தவர்கள். கலைஞர்கள் போன்றவர்கள் , நயினாதீவு பற்றி எழுதிய ஆய்வுகள் கட்டுரைகள், ஆவணப்படங்கள் போன்றவை தொகுக்கப் பெற்று நயினாதீவு சார்ந்த ஒரு ஆவணம், நூலாக, அன்றி, ஆவணக் கையளிப்பாக வெளிவருதல் வேண்டும்.
இயக்கர் நாகர் வரலாறு, ஈழ வரலாறு, யாழ்ப்பாணச் சரித்திரம். தென் இந்திய வரலாறு. தீவக வரலாறு, இந்து சமய வரலாறு, என அனைத்து வரலாற்றிலும் நயினாதீவு தொடர்பாக வந்துள்ள அனைத்து விபரங்களும் ஆய்வுத் தரவுகளோடு பேணப்படுதல் வேுண்டும்.

15) எமது ஊரைப் பற்றி கல்விமான்கள் பலராலும் எழுதப் பெற்றவை யாவும் தொகுக்கப் பெறுதல் வேண்டும். எமது ஊரில் வாழ்ந்த சித்தர் பரம்பரையினர், ஞானிகள், யோகிகள் பற்றிய தரவுகள் திரட்டப் படுதல் வேண்டும்.

16)காலத்துக்குக் காலம் நயினாதீவு பற்றிய ஆய்வுகள் நயினாதீவில் பிறந்தவர்களாலும், பிற கல்விமான்களினாலும் எழுதப் பெற்றுள்ளன. ஊடகங்களில் பல ஆய்வுக் கட்டுரைகள் வெளி வந்துள்ளன. இவை மீள் பதிவு செய்யப் பெற்று பாதுகாக்கப் படுதல் வேண்டும்.

17) இத்தகைய ஊர்சார்ந்த ஏராளமான ஊர்த் தொண்டுகள் பல உள்ளன. நாம் அனைவரும் ஊர்த் தொண்டர்களாக மாறி எமது கூட்டுழைப்பின் மூலம் எமது மண்ணின் மாண்பை எடுத்துரைக்க வேண்டும். இளையவர்களை இத்தகைய பணிகளுக்குள் பங்கு பெற வைப்பது, ஊர் பற்றிய உணர்வை அவர்களுக்குள் உணர வழி செய்யும்.

18) நயினாதீவுக்கே உரிய பாரம்பரியப் பண்பாட்டு விழுமியங்கள். ஊர்ப் பேச்சு வழக்குகள். உணவுப் பழக்கவழக்கங்கள், விழாக்கள், குடும்ப அமைப்பு முறைகள் , நாகபூசணி அம்மன் திருவிழாவும் குடும்ப வாழ்வும், ஏனைய ஆலய வரலாறுகளும் திருவிழாக்களும்., திருவிழாக்கால மகிழ்ச்சி, அமுதசுரபி என்னும் அன்னதானமடத்தின் அரிய பணிகள். கல்விப் பாரம்பரியம். வேளாண்மை, வளங்கள். இயற்கை எழில் போன்ற விடயங்கள் யாவும் நினைவூட்டப்படுதல் வேண்டும்.

19) இத்தகைய பணிகளுக்காக தனிப்பட்ட ஒரு இணையத் தளத்தை உருவாக்குவதன் மூலம் காத்திருக்கும் ஊர் சார்ந்த பணிகளை விரைவு படுத்தலாம்.

20) உலக நாடுகளில் வாழும் நயினாதீவு மக்கள் அனைவரையும், குறிப்பாக இளையவர்களையும் ஒன்றிணைத்து குழு ஒன்றை உருவாக்கிப் பணிகளைப் பிரித்துக் கொடுப்பது, கடமைகளை விரவாகச் செய்வதற்கும், செவ்வனே பணிகள் தொடர்வதற்கும் ஏதுவாக அமையும்.

மண் சுரக்கும் பூக்கல்லும் சங்கும் வேப்ப
மர இலையும் மற்று முள்ள பொருட்கள் தாமும்
விண் சுரக்கும் பொருளாக வேண்டி நித்தம்
விதிர் விதிர்த்து அகம் மகிழ்ந்து கண்ணில் ஒற்றி
கண் சுரக்கும் கண்ணீரால் நனைந்து போற்றி
காமுறுதல் காட்சி எனில் நயினைத் தீவில்
பண் சுரக்கும் பார்வதியின் தெய்வ மூலப்
பக்குவத்தின் முக்கியத்தைப் பணிவோம் நாமே.

ஆக்கம்.
**திருமதி. கலாநிதி குலமோகன்.**
**கனடா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் கலைகளில் மூத்த கலை வில்லுப்பாட்டுக் கலை

வில்லுப்பாட்டானது சுமார் 15 நூற்றாண்டுக்கும் முற்பட்டது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த வில்லுப்பாட்டு சங்ககாலத்தில் "வில்யாழ்" என அழைத்தனர் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். "வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சி" என பத்துப்பாட்டில் (பெரும்பாணாற்றுப்படை) கூறப்பட்டுள்ளது. இக்கலை பாணர்களால் நடத்தப்பட்டது என்றும் மாடன் கோவிலில் படைகள் வைத்து வில்லுப்பாட்டு நடைபெற்றது எனவும் பேராசிரியர் கோமதி நாயகம் அவர்கள் "தமிழ்வில்லுப் பாட்டுக்கள்" என்ற தனது ஆய்வு நூலில் குறிப்பிடுகின்றார். அத்தோடு கோடை என்ற விழாக்களிலும், வீரர்களின் நினைவு நாட்களிலும் நிகழ்த்தப்பட்டதாகவும் அறிய வருகிறது. பாணர்கள் விகடகவிகளோடு சேர்த்து தமக்கு எழிதிலே கிடைக்கப் பெறுகின்ற "கதிர்" எனப்படும் வில், கடம் (பானை), தாளம், உடுக்கு, தாளக்கட்டை என்பவற்றைக் கொண்டு மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டுகின்ற கதைகளைக் கூறி மகிழ்ந்தனர். தற்போது ஆர்மோனியம், தபேலா, மிருதங்கம், டோலக் என்பன சேர்த்துக் கொள்ளப்படுகின்றன.

இந்த வில்லுப்பாட்டுக்கலை தோற்றம் பெற்றமைக்கு பல காரணங்கள் உள்ளன. போராடச் சென்ற வில்வீரன் பகல்முழுவதும் பகைவர்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டு மாலை நேரங்களில் தனது முகாமுக்குத் திரும்புவான். அவன் தனது களைப்பை போக்க, தன் எண்ணங்களை, தனது தானைத் தலைவனை, தன்னை போருக்கு அனுப்பி வைத்த மனைவியை, பெற்றோரை நினைத்து வில்லிலே கட்டிய மணிகள் அசைய அம்பினால் தட்டிப் பாடி வந்தான். இதுவே இக்கலையின் தோற்றமாகியது என்பர். இக்கலையிலே சிறந்தவர்கள் அரசஅவை கலைஞர்களாக நியமிக்கப்பட்டு களத்தில் நிற்கும் போர் வீரர்களை மகிழ்விக்க அழைத்துச் செல்லப்படுவார்கள். நாளடைவில் இக்கலையானது அரசியல் மேடைகளிலும் கோவில்களிலும், மங்கள விழாக்களிலும் சிறப்பிடம் பெறத்தொடங்கியது.

வில்லுப்பாட்டிற்கு இன்னுமொரு வரலாறு உண்டு தென்பாண்டிச்சீமையிலே திருநெல்வேலியிலே நெல்லைச் சீமையிலே ஒரு குறுநில மன்னன்; நான் பல உயிர்களை கொன்று விட்டேனே! பல மிருகங்களை கொன்று விட்டேனே! என கவலையோடு தனது மந்திரியிடம் கேட்டானாம்.



வில்லுப்பாட்டின் இருக்கை முறை

மன்னன்: நான் செய்த பாவங்கள் எப்போ தீரும்.
மந்திரி: பாடுங்கள் பாவம் தீரும்.
மன்னன்: வாத்தியங்கள்
மந்திரி: தோளில் கிடக்கும் வில்லை காலில் கிடத்தி வையுங்கள் அம்பால் தட்டிப் பாடுங்கள். இதுவரை கொலைக் கருவியாக பயன் பட்ட வில் இனி கலைக் கருவியாகட்டும் வேட்டைப் பொருளாக இருந்தது இனி பாட்டுப் பொருளாகட்டும் இம்சையாக இருந்தது அன்பாக மாறட்டும் அம்பாக இருந்தது இனி இன்பமாக மாறட்டும்.
மன்னன்: வில் சரிந்தால்
மந்திரி: தேன் கொண்டுபோகும் பானையை வில்லோடு கட்டிவைச்சா வில் சாயாது கவுட்டுவைச்சா கடம், நிமித்திவைச்சா குடம்.
மன்னன்: முதலில் என்னத்தைப்பாட
மந்திரி:, தந்தனெத்தோம் என்று பாடுங்கள். தந்தனெத்தோம் என்றால் எவன் ஒருவன் தன்னை கலைக்குத் தருகிறானோ அவனே கலைஞன். அதுவே தன்னைத் தந்தோம், தன்னைத் தந்தோம் என்பதாகும். நாளடைவில் அது தந்தனெத்தோம் என்று மாறியது. வில்லிசைக்கு வேதம் "ஆமா" தான்.

வில்லும்பாட்டில் மட்டும் தான் வாழ்த்துதல் என்பது முக்கிய இடம் பெறுகின்றது. முதியவர்களை பெரியவர்களை வாழ்த்தும் பழக்கம் வில்லுப்பாட்டிற்கே உண்டு. வில்லுப்பாட்டானது முத்தமிழ் காப்பியங்களில் முதற்பெரும் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இருந்து வளர்ந்து வந்த கலை சிலம்பதிகாரதில் உரைநடை இட்ட செய்யுளில், வாழ்த்துதற்கு; திருமணம், திருவிழா, வெற்றிவிழா, நினைவேந்தல் என சகல நிகழ்வுகளிலும் வில்லுப்பாட்டு இசைக்கப் பட்டதாக கூறப்பட்டுள்ளது.

சுப்பிரமணிய "பாரதியார்" (பாரதி ஆவதற்கு முன்) எட்டு வயசாக இருக்கும் போது முதற்கேட்டு இன்புற்றதும், பாடிய பாட்டும் மூத்த கலையான வில்லப்பாட்டுக் கலையே ஆகும்.

கோவில் மேடையிலே வில்லுப்பாட்டு நடைபெற்றுக் கொண்டிருந்த போது, வில்லுப் பாட்டுப் பாடியவருக்கு பொற்கிளி வளங்க மறந்து விட்டனர். அவ்வேளை மறைமுகமாக பாட்டில சொன்னார்கள்.

வெத்தலை வைச்சான்
பாக்கு வைச்சான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கு வைச்சான்
வேறு ஒன்றை வைக்க
மறந்து போட்டான்
மறந்து போட்டான்

தேங்காய் வைச்சான்
பழமும் வைச்சான்
பழமும் வைச்சான்
தேவையான ஒன்றை வைக்க
மறந்து போட்டான்
மறந்து போட்டான்...

இதைக் கேட்டுக் கொண்டிருந்த சுப்பிரமணிய பாரதியார் அவையில் இருந்து தனது முதற்பாடலை இப்படிப்பாடுகிறார்.

"கடலை வைச்சான்
நதியை வைச்சான்
நதியை வைச்சான்
காற்றையும் ஆற்றையும்
ஊற்றையும் எல்லாம்
சேர்த்து வைச்சான்"

இவ்வளவு சிறப்புமிக்க கலை, பட்டபாட்டு படுகிறபாட்டு படப்போகிறபாட்டு இதுதான் வில்லுப்பாட்டு. சிரிக்கவைத்து சிந்திக்க வைப்பது தான் வில்லிசை மணிக்கணக்குப் பார்த்து சொல்வதல்ல வில்லுப்பாட்டு, உங்கள் மனக்கணக்கணக்குப் பார்த்து கதை செல்லுவதுதான் வில்லுப்பாட்டு. பாமர மக்கள் முதல் அனைவருக்கும் நல் ஒழுக்கத்தை புகுத்தி அன்பு, பண்பு, அறம், ஞானம் என்பனவற்றை நீதிக்கதைகளின் மூலம் சிரிப்புடன் கூடிய சிந்தனையை தூண்டுவதே இக்கலையின் நோக்கம். இக்கலை பக்தியை வளர்க்கும் புராண இதிகாசக்கதைகள், நாட்டுக்காக தம்முயிர்தந்த வீரர்களின் வரலாறு, சமூக மேம்பாட்டை கருத்தில் கொண்டு எழுகின்ற சீர்திருத்தக் கதைகள் என பரிணமிக்கின்றது.

ஐந்து பேர் முதல் எட்டுப்பேர் வரை கலந்து கொள்ளும் இக்கலையில் தமிழின் சிந்து, தெம்மாங்கு, நொண்டி, கும்பி, மகுடி போன்ற இசை மெட்டுக்களும் தேவைக்கேற்ப விருத்தம், கீதம், கீர்த்தனை என்பனவு சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. சினிமாப்பாடல்களைப் பாடுவதும் மேலைநாட்டு வாத்தியங்களை பயன்படுத்துவதும் வில்லும் பாட்டின் தனித்தன்மையை மழுங்கடிக்கும்.

நீங்கள் வானைப்பாடுங்கள், வையகத்தைப் பாடுங்கள், தேனைப்பாடுங்கள், திங்களைப் பாடுங்கள், எங்களையும் பாடுங்கள் என்று கேட்டால்! பல கலைகள் ஆணவமாக நடமாடுகின்ற நேரத்தில் உலகின் மிகப் பெரிய சந்தோசமான "மனம் விட்டுப் பேசி" வில்லிசை மூலம் நாங்கள் நீங்கள் கேட்பதை எல்லாம் ஆவணமாக்கித் தொடர்கின்றோம்.

நாங்கள் அவையைப் பார்த்து அடிக்கடி கும்பிடுவது மக்களின் கரகோசத்திற்கு மட்டுமல்ல, பத்து விரல்கள் என்பது பத்துமாதம் சுமந்த தாயை மறக்கக்கூடாது என்பது எங்கள் கருத்து. அதன்படி இந்த வில்லிசைக்கு தாய் சாட்சியாக பணியாற்றுவோம் வளர்த்தெடுப்போம் என்பதாகும்.

வில்லுப்பாட்டால் நமக்கென்ன லாபம்? என்றால் ஒன்றும் உருப்படாது. நமது பாட்டில் கச்சேரிகள் செய்து பழந் தமிழை வளர்ப்போம். அது கலையானால் ஆகட்டும், ஆகாவிட்டால் போகட்டும், இக்கலையில் முத்தமிழில் இடம் பெறுகின்ற இயல், இசை, நாடகம், நகைச்சுவை, நடனம், அபினயம், கூத்து, பாட்டு, தெம்மாங்கு, கிராமிய, நாட்டு வள உரை நடைகள், கீர்த்தனைகள், கீதங்கள், தமிழிசைப் பாடங்கள் என அனைத்தும் உள்ளடங்கியுள்ளன. இதை விட தமிழை வளர்க்க எப்படியான கலையை நாம் எதிர்பார்க்கிறோம்? என்பது எனது கேள்வியாகும்.

தமிழ் நாட்டில் போரசிரியர்கள் மற்றும் புலவர்களாலும் வளர்க்கப்பட்ட இக்கலைக்கு ஆசிரியர் ஐயம்பிள்ளை, பிச்சுக்குட்டிப் புலவர் ஆகியோர் புத்துயிர் கொடுத்தனர். அவ்வேளை நடிகர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் இதன் பால் ஈடுபாடு கொண்டு திரைப்படத்திலும், வானொலியிலும் மேடையிலும் குழு அமைத்து மேலும் சிறப்புச் செய்தார்கள். மேலும் கொத்தமங்கலம் சுப்பு, அவர் மகன் கலைவாணர் சுப்பு ஆறுமுகம், நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன், குலதெய்வம் ராஜகோபால், என்.எஸ்.கே. கோலப்பன் சேவிற்குளம் தங்கையா, மனோகரன் நெல்லை நாராயணசாமி போன்றோரும் பெரும் பங்காற்றி பிரபலப்படுத்தினர்.

நமது தாயகத்தில் மாஸ்டர் சிவலிங்கம் லடீஸ் வீரமணி உடப்பூர் சோமஸ்கந்தர், வடபுலத்தில், திருப்பூங்குடியூர் கே. ஆறுமுகம், தாவடி வடிவேல், அச்சுவேலி கலைமாமணி கலா வினோதன், எஸ்.கே. கணபதிப்பிள்ளை (சின்னமணி) எஸ். கணேச சுந்தரம், வேலணை, சபா. சதாசிவம், அமரர். நயினை கிருஸ்ணகுமார், வானம்பாடிகள், ஈஸ்வரன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமாமணி நல்லூர் ஸ்ரீ தேவி சோமஸ்கந்தகுருக்கள், நாச்சிமார் கோவிலடி ராஜன், பொன் அருந்தவநாதன், அன்டன் பீலிக்ஸ் நான் சார்ந்த ஈழ நயினை உமைமாறன் குழுவினரும் வில்லிசை கலையை முன்னெடுத்து வருகின்றனர். தாயகத்தமிழர் மத்தியில் நீங்காத இடம் பிடித்தவர் கலைமாமணி சின்னமணி அவர்களே ஆகும். வில்லிசையின் மாபெரும் சக்தியாக நிகழ்ந்தவர் அவர்.

எனவே முத்தமிழின் மூத்த கலை வடிவமான வில்லுப்பாட்டுக் கலையை வளர்த்தெடுக்கவேண்டியது எமது பணியாகும். சரித்திரத்தை உருவாக்குவது சக்தி, சக்தியை உருவாக்குவது பக்தி அதற்கு துணை நிற்பது வில்லிசையின் யுத்தி.

"வாழ்க தமிழ் வளர்க வில்லுப்பாட்டுக் கலை"

நன்றி

உமைமாறன் சடையப்பசாமி
வில்லுப்பாட்டுக் கலைஞர்
ஈழ நயினை உமைமாறன் குழுவினர்

ஆரம்பம் - 1988

## ஊர் நினைவுகள்



## அகவை 50 காணும் உறவுகள்

## N. சுதர்சன்

## S. முருகவேள்

## M. பரமேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Chapel
Ridge
FUNERAL HOME INC.

உங்கள் உறவொன்றைப் பிரிந்து தடுமாறும் வேளையில்
இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்
அனுபவத்தோடு கூடிய அன்பான சேவையை வழங்குகிறோம்

**மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் சேவைகள்**

We provide a full range of services to families who have experienced a loss of a loved one, including:

**Visitation**
**Funeral & Memorial Services**
**Receptions and**
**Arranging Burial & Cremation**

printfast.ca




**Christeen Seevaratnam**
**416-258-6759**

**Vilosan Sivatharman** B.Eng
**416-993-0826**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு விழா - 2016

1. ஆண்டுபேர் துர்முகிசித் திரைத் திங்களில்
பூண்ட இருப(து) அகவையில் - நீண்டபுகழ்
நயினாதீவு கனேடிய ரபிவிருத்திச் சங்கமது
பயிராய் பயன்தந்த தின்றுபார்.

2. தாயகந்தைக் காத்து நிற்கும் ஆலயங்கள்
அத்தனையும் அரவணைத்து அவற்றைக் காத்து
தூயகருத் தொருமித்துத் தொண்டு செய்து
தொழுமடியார் பயன்பெறவே நற்
துணையாய் நின்றறப் பணிகளாற்றும்
தொண்டர்களாய் தோழர்களாய் தலைவர்களாய்
அணையாத தீபங்கள் பலவும் ஏற்றி
அம்பாளின் அருள் பெறவே வாழ்த்துகின்றோம்.

3. மணிபல்லவ கலாமன்றின் மகத்தான பணியறிந்து
மக்களவர் எழுச்சிகொண்ட வகையும் தேர்ந்து
கணிக்கவல்ல சங்கமெனத் தாம் விளங்கி
கருத்துடனே நல்லதொரு பணியை யாற்ற
துணிவுடனே முன்வந்த கனேடியர் சங்கமது
தம்பணியாய் ஒப்பனை அறை யமைத்து

மணிபல்லவத்துக்கும் பெருமை சேர்ந்து
புகழ்தனையும் தமக்கேயாய்க் கொண்டு வாழ்க.

4. தாய்நாட்டு மண்ணிலிருந்து கனடா நாடி
தணியாத ஆர்வமுடன் வருவோர் தம்மை
தாமாகச் சென்றரவனைத் தன்பு காட்டி
தம்முடனே தங்க வைத்து ஒன்று கூடி
தீபத்தின் விழாக்களில் கௌரவித்து விருந்தளித்து
தெவிட்டாத ஊர்க்கதைகள் பலபேசும் நாள்
வாராதா மீண்டுமென ஏங்க வைக்கும்
வண்ணமிகு தீபத்திருபதாவதாண்டு வாழ்க.

5. கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தார் நயினையுறை
தெய்வங்கள் அனைத்தும் பணிந்து
விநாடியேனும் மறவாத வேட்கை கொண்டு
வேண்டும் பணி மக்களுக்கா யாற்றிநின்று
விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவித்தூர்ச்
சனசமூக நிலையங்கள் தமை வளர்த்து
சளையாது மக்களுக் குதவி செய்யும்
உயர்வான சங்கமது நீடுவாழ்க.

6. ஊர்மக்கள் தமைநாடி வரும் போதெல்லாம்
உணர்வோடு அவர்தேவை தமை யறிந்து
பேர்சொல்லித் திரியாமல் பெரும் பங்கேற்று
தீராத நோய்களையும் தீர்த்து வைக்க

யார்மூல மாயேனும் உதவி பெற்று
நலமோடு அவர் வாழவழி சமைத்து
பேரெடுத்த பெருமைமிகு சங்கமான
கனேடியர் சங்கம் வாழ்க நீடு

7. கல்விக் கூடங்கள் மூலம் உயர்சித்தியெய்தி
கரையேற முடியாத மாணவர்க்குக் கலைச்
செல்வி அருள்கிடைக்க மிகவிரும்பி
சிறப்புக்கள் செய்தவர்க்கு வழியும் காட்டி
நல்லதொரு நிதிவழங்கி வாழ்த்தும் பாங்கு
நானிலத்தில் வேறெங்கும் காணலாமோ
பல்நெடுங் காலமாக பணிகளாற்றும் பண்புமிகு
நயினை கனேடியர் சங்கம் நீடுவாழ்க.

ப.க.மகாதேவா
துணைத் தலைவர்
மணிபல்லவ கலாமன்றம்
நயினாதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றென்றும் எம் நன்றிக்குரியவர்கள்.....

நயினாதீவு கனடிய அபிவிருத்திச் சங்கத்தின் தீபம் 2016 கலை நிகழ்வை காண வந்திருக்கும் எமது உறவுகள், நண்பர்கள், கலை உள்ளங்கள் யாவருக்கும் சங்கத்தின் முதற்கண் வணக்கங்கள்.

தீபம் 2016 கலைநிகழ்வை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்த சங்க நிர்வாகசபை இணையர், சங்க அங்கத்தவர் இணையர் அவர்கட்கும்,

கனடிய தேசியக் கொடியை ஏற்றிவைத்த சங்க உபதலைவர் திரு. வி. மனோகர் அவர்கட்கும், கனடிய கீதத்தை பாடிய செல்வி. சுாரங்கி சிவனேசன் அவர்கட்கும்,

தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்த தேசிய பேரவை உறுப்பினர் அவர்கட்கும், சங்கக் கொடியை ஏற்றிவைத்த சங்க உபசெயலாளர் திரு. செ.விமலானந்தன் அவர்கட்கும், சங்ககீதத்தை பாடிய செல்வி. சுாயகி ஜெயகாந், தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடிய செல்வி. அபிராமி கிருஸ்ணதாஸ், செல்வி. பிரியங்கா கிருஸ்ணதாஸ் பயிற்றுவித்த ஆசிரியை அவர்கட்கும்,

எமது அழைப்பை ஏற்று இந் நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதம விருந்தினர் கலாநிதி. மாரிமுத்து வேதநாதன், சிறப்பு விருந்தினர் பல்வைத்திய நிபுணர் திரு. ஆதிகணபதி சோமசுந்தரம், டாக்டர். சுகந்தன் கைலாசநாதன், கெளரவ விருந்தினர் திரு. கணேஸ்வரன் கணபதிப்பிள்ளை, நடன நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய ஆசிரியைகள் திருமதி. செந்தில்செல்வி சுரேஸ்கரன், ஸ்ரீமான் வாசு சின்னராசா, திருமதி. வனஜா ரவிகரன், திருமதி பூங்குழலி இளங்குமரன் ஆகியோருக்கும், நடனத்தில் பங்குபற்றிய மாணவர்களுக்கும்,

நாடகத்தை நெறிப்படுத்தி வழங்கிய திரு. தியாகராசா இளங்குமரன் மற்றும் நாடகக் கலைஞர்களுக்கும்,

மழலைப் பேச்சைத் தந்த மழலை செல்வன். கார்த்தீபன் உமைமாறன், செல்வி லக்சனா சிவகுமார், செல்வன் பிரனேஷ் மணிமாறன் ஆகியோருக்கும், திரையிசை நடனத்தை தயாரித்து வழங்கிய திரு. தனேஷ் சதானந்தன், மற்றும் மாணவர்களுக்கும்,

வாத்திய பிருந்தாவைத் தொகுத்து வழங்கிய செல்வன் நிதர்சன் இதயராசன், மற்றும் கலந்து சிறப்பித்த இளம் கலைஞர்கட்கும்,

நகைச்சுவை நாடகத்தை தொகுத்து வழங் கனடிய நயினை திரு. அமல்குமார் சின்னத்தம்பி மற்றும் நாடக இசை அமுதத்தை வழங்கிய திருமதி. சாருமதி மனோகரன், பக்கவாத்தியக் கலைஞர்கள், மாணவர்கள் ஆகியோருக்கும்,

விழா மண்டபத்தை தந்துதவிய கல்விச்சபையினருக்கும்,

தீபம் நிகழ்ச்சிகளை உலகம் முழுவதும் நேரடியாக ஒளிபரப்புச் செய்யும் அனலை எக்பிறஸ் நிறுவனத்தாருக்கும்,

படப்பிடிப்பு, ஒளிப்பவாக்கம் செய்யும் TVI நிறுவனத்தாருக்கும்,

தீப மலரை வெளியிட்டு வைத்த மலராசிரியர் ச. ஊமைமாறன், முதற்பதிப்பை பெற்ற திருமதி. விஜயா இன்பநாதன் அவர்கட்கும் மற்றும் தீப மலரை குறகிய காலத்தில் சிறப்புற அச்சிட்டு வழங்கிய APEX CREATION நிறுவனத்தாருக்கும்.

கலைஞர்களுக்கான விருதுப் பட்டயத்தை செய்துதவிய SNS Engravers ஸ்தாபனத்தாருக்கும்,

தீபம் கலை நிகழ்வை முழுமையாக தொகுத்து வழங்கிய திரு. செ. விமல், செல்வி அபிராமி விவேகானந்தன் அவர்கட்கும்,

தீபம் கலை நிகழ்வை மக்களிடம் சேர்ப்பித்த சகல பத்திரிகை வானொலி தொலைக்காட்சி நிறுவனத்தாருக்கும்,

சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டங்கள் பொதுக்கூட்டம் என்பவற்றை நடத்துவதற்கு தமது சொந்த இடத்தை அளித்த உதவிய South Asian Dance Acadamy, Mercury Tax நிறுவனத்தாருக்கும்,

தீபம், ஒன்றுகூடல் விளையாட்டுப் போட்டி, தீபம் சிறப்புமலர் மற்றும் ஊரின் வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை சிறப்பாகச் செய்வதற்கு எமக்கு நிதி உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கிய ஊரின் உற்றார் உறவினர் வர்த்தகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள் ஆகியோருக்கும்,

தீபம் 2016 தீபம் விழாக் குழுவினர் கலை நிகழ்வை சிறப்பாக நடாத்துவதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும்

எங்களுடைய சிரம் தாழ்ந்து இருகரம் கூப்பி பணிவான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றிகள் பல.....

நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்
கனடா - ஏப்ரல் 25, 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org